ஓம் நமோ பகவதே வாஸுதேவாய நம:

ஜய ஜய ரகுவீர ஸமர்த்த

ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜய ராம்

ஸ்ரீராம் ஜயராம்

ஜய ஜய ராம்

ஸ்ரீராம் ஜயராம்

ஜய ஜய ராம்

ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜய ராம்.

ஸ்ரீஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமி அருளிச்செய்த

மானஸ போதாம்ருதம்

தாத்பர்யத்துடன்

பக்த பாத தூளி

தஞ்சை R. புருஷோத்தம் பிள்ளை

அவர்களால்

திராவிட பாஷையில். மொழிபெயர்க்கப்பட்டு

சென்னை செல்வரங்கன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1942.

நூன் முகம்

ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸரால் வரையலுள்ள இம்மானஸ போதாமிருதம் அவருடைய மனதிற்கு மாத்திரமே போதிக்கப்பட்டதல்ல. மனன சக்தி வாய்ந்த மனுஷ்ய கோடிகளுக்கு போதிக்கப்பட்டதேயாகும். ஆனல் அது மஹாராஷ்டிர பாஷை யிலிருப்பதால் அப்பாஷை அறியாதவர்கள் கூட மானஸ போத தத்துவங்களை தெரிந்துகொள்வது மிக்க அத்யாவசியமானதினல் இச்சிறு கிரந்தத்தை திராவிட பாஷையில் மொழிபேர்த்து தென்னாட்டி னர்களுக்கும் கூட ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸருடைய அவதார மஹிமையும் அவரால் உலகத்திற்களிக் கப்பட்ட உண்மை அறிவு அருளையும் தென்தேசத் தினர் இம்மானஸ போத கிரந்த மூலியமாக தெ ரிந்துகொண்டு ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸரையும் நமது ஆசார்ய பரம்பரையில் ஒருவராக அறிந்து அவரது பக்தி ஞானம்ருத ரஸவாரியான மானஸ போதத் தை யுண்டு நாம் ஈஸ்வர சாயுஜ்யத்திற்கு பாத்திரர் களாவதற்கு தகுந்த யோக்யதை அடைய இச்சிறு கிரந்தம் எல்லோருக்கும், மற்று முக்கியமாக தமிழ் நாட்டினர்களுக்கும் சகாயமாக விருக்குமென்பது எனது மனப்பூரண அபிப்பிராயம்.

இப்படிக்கு

ஸாது ஸ்ரீ ப்ரணவானந்த ஸ்வாமி.

அறிவிப்பு

மிக்க பவித்திரர்களான சாயுஜ்ய பதவியை யடைந்த ஸாது ஸந்தர்களின் சமோகத்தால் ஸர்வ ஸாதனங்களையும், விவேக வைராக்கியத்தைப்பற்றியும், சகுண நிற்குண சுத்த ஸ்வரூபத்தின் பக்தியும், ஸ்ரீ சத்குரு சேவையும், உபஸம்ஹாரமானவுமான இவைகளைப் பற்றி மிக்க விமரிசையாகவும், சுலபமாகவும், தெளிவாகவும், நயமாகவும் திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களால் ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் அன்புடன் ஓதி அன்பர்பலரும் உய்ய 205 ஸ்லோகங்களால் வெகு அழகாக மஹாராஷ்டிர பாஷையில் ஜனங்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு அருளிச்செய்தார். இக்கிரந்தத்தின் சுவை எத்தகையதெனில் ஸ்ரீ ராமலிங்கம் சொல்லியருளியபடி தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாக கூட்டி சர்க்கரையும் கற்கண்டும் தேனும் மிகக்கலந்ததினால் உண்டான சுவையைவிட மிக்க தித்திக்கும்படியான பொருள் அது என்றவாறு அந்த ருசியை அதி ஆநந்தத்துடன் அனுபவித்து, அவ்வனுபவத்தால் ததும்பியது இக்கிரந்தம்.

மஹாராஷ்டிர பாஷையிலுள்ளதை திராவிட பாஷையில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற ஒரு உற்சாகமும், ஆவலும் இவ்வெளியனுள்ளத்தில் இரண்டாண்டு களாயிருந்தும், இவ்வாண்டில் நடந்த இம்மஹானின் விழாவில் அப்பிரேமை ததும்பினதினாலும் மேலும் இம்மஹானின் அறிய பெருமைகளை சான்றோர்களால் சண்டமாருதமாகவும், நீரோடை கரை புரளுமாறு சொல்லழகும், அதினாலுண்டான பொருளழகும் கேட்டு அனுபவிக்க அசக்தனாயினும் அப்பிரேமையிலுண்டான பிரவாஹத்தின் சிறு திவிலைகள் பட்டதால் இவ்வெளியனது அவா அதிகரித்து இம்மானஸ யோதாமிருதத்தை தமிழில் மிக்க எழிய நடையில் இலக்கண இலக்கியத்தில் அசக்தனானவனால் பிதற்றப்படினும், குற்றம் குறைகளை பாராட்டாது ஹம்ஸபக்ஷி ஞாயம்போல் ஸாரத்தை மட்டில் எடுத்துக்

கொண்டு மற்றவைகளை பொருட்செய்யாது தள்ளுமாறு அந்தக்கரண சுத்தியோடு இதைக்கையாள்பவர்க்கும் மற்றவர்களுக்கும் இத்தாஸனது பிரார்த்தனை.

இக்கிரந்தத்தின் மற்றொரு மஹிமை யாதெனில் ஸ்ரீ ராகவ மூர்த்தியின் பூர்ண கிருபாகடாக்ஷத்தால் இம்மஹான் ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் ஒரு அன்னை தன் குழந்தைகளை பாதுகாப்பாற்றுவதற்கு சாம, தான, பேத, தண்டமென்ற சதுர்வித உபாயங்களால் எப்படிச் சீர்திருத்துவாளோ அவ்வண்ணம் மானிடர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டே செய்யப்பட்டது. மற்றபடி தன் சாமர்த்தியத்தைக் காட்டவாவது, தன்னை புகழுமாறுவது, ஜனங்களை ஏமாற்றுவதற்காவது, பொருள் சம்பாதிப்பதற்காவது, உத்திராக்ஷ பூனைபோல் நடிப்பதற்காவது கிரந்தங்கள் செய்யப்பட்டனவல்ல. இம்மஹான் வாழ்நாள் சரித்திரத்தால் தெரிந்துகொள்ளலாம். அநேக மஹான்கள் இதையே கடைப்பிடித்து லீலைகள் செய்ததின்காரணம்.

நிற்க இக்கிரந்தத்தை உண்மையாக மிக்க சிரத்தையுடன் சிரவண மனனம் செய்யும் நண்பர்களின் சித்த விருத்திகள் அவசியமாக நல்வழியில் திரும்பாதிராதென்பது இம்மஹானின் தீர்மானமும் இத்தாஸனது உண்மையான நம்பிக்கையுமாகும்.

இக்கிரந்தத்தையே ஆந்திர பாஷையில் இவ்வெளியனது நண்பரான ஸ்ரீ மாதவராவ் அவர்களால் செய்யப்பட்டுமிருக்கிறது. ஆனல் மஹாராஷ்டிர பாஷையும், ஆந்திர பாஷையும் கையாள்பவர்கள் இத்தென்னுட்டில் குறைவாததால் திராவிட பாஷையில் யாவத்திராளுடை அனுக்கிரஹத்தால் ஒருவாறு எழுதத்துணிந்ததின் காரணம்.

ஸ்ரீ ஸத்குரு ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளின் வாழ்நாளைப் பற்றியும், அம்மஹானின் மஹிமை, அர்ப்புத லீலைகளைப் பற்றியும் இம்மானஸ் போதாமிருதத்தில் எழுத காரணமில்லாததால் அவைகளைப்பற்றி எல்லா ஸந்தர்களின் கிருபையும், அனுக்கிரஹமுமிருக்,

கும் பக்ஷத்தில் இதைப்பற்றி மற்றொரு புத்தகம் எழுதப்படும். ஆயினும் இரண்டொருவார்த்தைகள் சொல்லியே தீரவேண்டும், அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கினும் மிக்க வல்லவர். இதற்கு அத்தாக்ஷியாக அவரை நாம் பார்க்கவிடினும், அவரது பிம்ப உருவினுல் அறியலாம். அம்மஹானின் லீலைகள் யாவும் கவனித்து பார்க்கின் தன் மஹிமையை உலகத்தாருக்கு காண்பிக்க வாவது அல்லது தன்னைப்பற்றியாவது செய்தவைகளல்லவென்று நன்ருய் விழங்கும். அம்மஹாசீலரால் அநேக கிரந்தங்கள் செய்யப்படினும் மானஸபோதமும், தாஸபோதமென்ற இரண்டும் மிக்க சிறந்த கிரந்தங்கள். அதினுல் மற்றவைகளைப்பற்றி குறைவு செய்ததல்ல. காலதேசவர்த்தமானங்களைக் கொண்டும் சொன்னதேயொழிய மற்றொன்றில்லை, அபிப்பிராய பேதமிருக்கும் பக்ஷத்தில் தடுத்தாட்கொள்ளும்படிக்கு பிரார்த்தனை.

இப்புத்தகத்திற்கு நூன்முகம் வரைய பிரார்த்தித்துக்கொண்டபொழுது மிக்க அன்புடன் அதை ஏற்றுக்கொண்ட அறிய பெரிய அன்பே உருகொண்ட உண்மையை விழக்கும் அருவுருவாய் அனைத்து மறிந்த ஞான சிகாமணியாகிய உத்தம புருஷரான ஸாது ஸ்ரீ ப்ரணவானந்த ஸ்வாமி அவர்களின் கருணம்பர பத்மபாத யுகளங்களிற்கு இத்தாஸனது பூர்ண நமஸ்காரம்.

ஜய ஜய ரகுவீர ஸமர்த்த.

இப்புத்தகத்தை படிப்போர்க்கு ஒரு குறிப்பு

தமிழ் பாஷையில் சிற்சில அக்ஷரங்களில்லாததால் இந்த ஸ்லோகங்களை படிக்கும் புனிதர்கள் சப்த சோரமின்றி உச்சரிக்குமாறு கீழ்கண்ட ஆங்கிலேய எழுத்துக்கள் தமிழ் எழுத்தின் மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன :—

G	CH	D	DH	BH
க	ச	ட	த	ப
గ	ఛ	డ	ధ	భ

ஸ்லோகங்களில் மேற்கண்ட ஆங்கிலேய அக்ஷரத்தால் சொற்குறைவு வாராதபடிக்கு கூடியவரையில் அடையாளங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதைப் படிப்பவர்கள் அவ்வாறு படித்து அனுஸந்தானம் செய்யும்படியாய் பிரார்த்தித்து கேட்டுக் கொள்ளுகின்றனன்.

ஓம்

ஜய ஜய ரகுவீர ஸமர்த்த

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ் அருளிச்செய்த

மானஸ போதாமிருதம்.

G
சுகாஸாரிகே பூர்ண வைராக்கிய ஜ்யாசே
G
வசிஷ்டா பரீ ஞான யோகேஸ்வராசே
கவீ வால்மீகா ஸாரீகா மான்ய ஜஸா
G DH
நமஸ்கார மாஜா குரு ரர்ம தாஸா.

(தாத்பரியம்) வைராக்கியத்தில் ஸ்ரீ ஸுகாதி மஹருஷிகளுக்கும், ஞானசிரேயஸில் ஸ்ரீவசிஷ்டரைபோலும், கவியில் வல்லவரான ஸ்ரீ வால்மீகி முதலிய ஆசாரியர்களுக்கும், நிற்க மேற்கண்டவர்களுக்கு ஸமத்துவமான எனது குருநாதனுன ஸ்ரீ ஸத்குரு ஸமர்த்த ராமதாஸ் அவர்களுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம்.

G DH G
1. கணதீசஜோயீஸ ஸர்வா குணஞ்சா
BH BH G
முளாரம்ப ஆரம்ப தோ நிற்குணசா
DH
நமூ சாரதா மூள சத்வார வாசா
G G
கமூ பந்த ஆனந்த யாராக வாசா

(தா) சிவகணங்களுக்கு அதிபதியாகவும், கீர்த்தி, லக்ஷ்மீ கடாக்ஷம், உதார குணம். ஞானம், வைராக்கியம், நிற்குணத்திற்கு மூலாதாரமாயும் பொருளை விழக்கும் அறிவேவுருவெடுத்த ஸ்ரீ மகா

கணபதிக்கும், இதைப்போலொத்த சர்வ சக்திவாய்ந்தவும், நான்கு வாக்குகளுக்கும் ஆதாரமான சாரதாதேவிக்கும், இவர்கள் யாவர்க்கும் ஆதாரமான பரதேவதைக்கும் (பராசக்தி) அனன்ய பாவனையோடு நமஸ்கரித்து ஸர்வேஸ்வரனான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு பாத்திரர் ஆவோம்.

BH
2. மனா சஜ்ஜனா பக்தி பந்தேசி ஜாவே
BH
தரி ஸ்ரீஹரி பாவிஜேதோ ஸ்வபாவே
DA DH
ஜனீ நிந்த்ய தே ஸர்வ ஸோடுனி த்யாவே
DH BH
ஜனீவந்த்ய தேஸர்வ பாவே கராவே

(தா-ம்) ஓ மனமே! பக்தி மார்க்கத்தைக்கடைப்பிடி, ஏனெனில் பக்தியோகத்தினாலே தான் ஸ்ரீ லக்ஷ்மிகாந்தனை வெகு சுலபமாக அடையலாம். நிற்க ஸாது ஜனங்கள் பஹிஷ்கரிக்கும் காரியங்களை நீயும் அவ்வண்ணமே செய்து அவர்கள் எக்காரியத்தில் லக்ஷியம் வைத்திருக்கிறார்களோ அவைகளை தினசரி நீயும் அனுசரித்துவர பிரையத்தனம் படுவாயாக.

மேற்சொன்ன பக்திமார்க்கம் என்பது ஒன்பது வகைப்படும், அவையாவன:—

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:
DH
ஸ்மரணம் பாதஸேவனம்
BH DH
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்
DH
ஸக்ய மாத்ம நிவேதனம்

ச்ரவணம்:—பகவானுடைய லீலைகளையும், குணங்களையும், கர்ம உபாஸனை, ஞானம், சித்தாந்தம், மஹாவாக்கியத்தின் பரீசீலனை, ஸாதுக்களின் சரித்திரங்களாகிய இவைகளின் சாரங்களை

கிரஹித்தல் முதலியன இதைக் கடைப்பிடித்தவர் பரீக்ஷித்து மஹாரர்ஜா.

கீர்த்தனம்:—பகவத் காலக்ஷேபம், பிறருக்கு போதனை இவைகளினால் கேட்போர்க்கு ஆனந்தம் கொடுப்பது இதில் ஈடுபட்டவர் நாரத முனிவரே.

நாமஸ்மரணம்:—அகண்ட பகவன் நாமம் செய்தல். இந்த ஸாதனம் எல்லோருக்கும் உரித்து. இதனால் ஜென்மம் துல்யமாகும். இக்கலியில் இவ்வனுஷ்டானம் பகவத்கிருபைக்கு சுலபமாக காட்டும் வழியாகும். இதை அனுசரித்தது பிரஹலாத ஸ்வாமி.

பாதசேவனம்:—மாதா, பிதா, குரு, தெய்வம், இந் நால்வருக்கும் சிஸ்ரூஷைசெய்து, தேக தத்துவங்களை அவர்களின் பாதத்தில் அர்ப்பணம்செய்தல். இதை முறையே அனுசரித்தது மஹாலக்ஷ்மி.

அர்ச்சனம்:—தேவர், வேதோத்தமர், அக்னி, ஸாதுசந்தர்கள், யதி முதலானவர்களுக்கு பூஜை, காயத்திரி முதலீரான பூஜைகள். இதை அனுஷ்டித்தது பிருதுராஜன்.

வந்தனம்:—நம்மைவிட பெரியோர்களுக்கு நமஸ்கரித்தல், இதனால் சமாதானமும், கடவுள் கிருபையுமுண்டாகும், இதிலீடுபட்டவர் அக்ரூர் மஹான்.

தாஸ்யம்:—ஸத்குரு, ஸாதுக்களால் இட்டவேலையை சிரமேற்கொண்டு மிக்க தண்மையோடு செய்தல். இம்மார்க்கத்தை கைப்பற்றினவர் ஆஞ்சினேயர்.

ஸக்யம்:—எல்லா ஜீவர்களிடத்து மன்பு. மாதா, பிதா, குரு, ஸாது ஜனங்களிடமிருக்கும் பிரேமையால் நண்பு. இந்த பாவம் அர்ஜுனனுக்கே பொருந்தும்.

ஆத்மநிவேதனம்:-இச்சரீரத்திலிருக்கும் 96-தத்துவங்களையும் ஈஸ்வரார்ப்பணம் செய்து ஏகாகிற சித்தத்துடன் துரியநிலையிலிருப்பது. இதை அனுசரித்தவர் ஞானேஸ்வரப்பிரபு.

BH
3. ப்ரபாதே பனீ ராம சிந்தீத ஜாவா
D DH DH
புடே வைகரீ ராம ஆதீ வதாவா
DH
ஸதாசார ஹா தோர ஸோடு நயேதோ
DH
ஜனீ தோ சிதோ மானவி தன்ய ஹோதோ.

(தா-ம்) இந்திரியங்களுக்கு காரணமான மனமே! தினமும் அதிகாலையி லெழுந்து நிர்மல மனதுடன் ஸ்ரீராம நாமத்தைச்செய். மேலும் பேசும்பொழுதும், நடக்கும் போதும், காரியங்கள் செய்யும் பொழுதும் பகவன் நாமத்தை ஸ்மரிப்பாய். இதை நீ விடாது செய்யின் அதன் மஹிமை உனக்கே தெரியும். இப்படி மனனம் தவராது செய்யின் மனிதன் துல்யனுகிருன்.

DH
4. மனு வாஸனு துஷ்ட காமா நயே ரே
DH
மனு ஸர்வதா பாப புத்தி நகோ ரே
மனு ஸர்வதா நீதி ஸோடூ நகோஹோ
மனு அந்தரீ ஸார வீசார ராஹோ.

(தா-ம்) ஓமித்திரமனமே! துஷ்ட காரியங்களைச்செய்யாதே. எப்பொழுதும் பாப காரியங்களில் பிரவேசிக்காதே. நீதி மார்க்கத்தைக்கைவிடாதே. எப்பொழுதும் அளியா பொருளான ஸத்தினும் அளியும் பொருளான அஸத்தினு முள்ள வித்தியாஸத்தை யுணர்ந்து சிரேஷ்டமான ஸத் காரியத்திலே ஸதா ஈடுபடுவாய்.

DH
5. மனு பாபசங்கல்ப ஸோடூனி த்யாவா
DH
மனு ஸத்ய ஸங்கல்ப ஜீவீ தராவா
மனு கல்பனு தே நகோ வீஷயாசி
G D
விகாரே கடே ஹோ ஜனீ ஸர்வ சிசி

(தா-ம்) ஓ ஹிதமனமே! எல்லா பாப சங்கல்பங்களை விட்டு, புண்ணியத்திற்கு காரணமான ஸத்தியத்தை திட புத்தியுடன் உணர்ந்து அல்ப சங்கல்பங்களான பிரபஞ்ச விஷய வாசனைகளை விட்டுவிடு. என்னவெனில் அதின் மூலமாக மனோ விகாரங்கள் அடைந்து உலக நிந்தைக்கு பாத்திரனாவாய்.

DH DH
6. நகோ ரே மனா க்ரோத ஹா கேதகாரீ

நகோ ரே மனா காம நாநாவிகாரி
B G
நகோ ரே மனா லோப ஹா அங்கி காரு
DH BH BH
நகோ ரே மனா மத்ஸரு தம்ப பாரு

(தா-ம்) ஓ மனமே! நாம்மிக்க அன்புவைத்த பொருளிளப்பதால் உண்டாகும் குரோதா காரங்களையும், நிற்க அனேக பாவங்களையுண்டாக்கும் அறுஷட்வர்கங்களையும் (காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியம்), மேற்சொன்னவைகளுக்கு மேலான டம்பத்தையும் எப்பொழுதும் அணுகவிடாதே.

DH DH
7. மனா ச்ரேஷ்ட தாரிஷ்ட ஜீவித ராவே
B CH
மனா போலணே நீச ஸோசித ஜாவே
DH DH
ஸ்வயே ஸர்வதா நம்ர வாசே வதாவே

மனா ஸர்வ லோகாஸி ரே நீவவாவே

(தா-ம்) ஓ பிரியமனமே! எல்லா குணங்களுக்கும் மூதன்மையான தைரியமென்ற தத்துவத்தை திடமாகப்பிடி. எப்பொழுதாவது உனக்கு அவமானம்வரின் அதைப்பொருத்துக்கொள். மேலும் எப்போதும் நீ ஸத்ய விஷயங்களில் ஈடுபட்டு அதை அனுபவத்தில் வைத்து, இதர ஜீவர்களின்மீது பிரீதி விஸ்வாசத்துடன், சகல ஜனங்களுக்கும் சந்தோஷமுண்டாகும்படி நடந்துகொள்.

DH G G
8. தேஹே த்யாகதா கீர்த்தி மாகே உராவீ
DH
மனா ஸஜ்ஜனா ஹேசி க்ரியா தராவீ
DH
மனா சந்தனாஞ்சே பரி த்வா ஜிஜாவே
பரி அந்தரீ ஸஜ்ஜனா நீவவாவே.

(தா-ம்) ஓ மனமே! நீர்க்குமிழியொத்த இத்தேகம் அழிந்தாலும் உனது பெயர் மறவாது கீர்த்தியை சம்பாதிப்பதற்கு தகுந்த ஸத்காரியங்களைசெய்து உன் வாழ்நாளை கழி. எப்படி சந்தனக்கட்டை உரைக்க உரைக்க தன் மணம் போகாததுபோல் ஜகத்தை உத்தாரணம்செய்ய அவதரித்த ஸாதுஜனங்களின் அன்பு உன்மேலிருக்கும்படி நடந்துகொள்.

DH D
9. நகோ ரே மனா த்ரவ்ய தே பூடிலாம்சே
BH DH
அதி ஸ்வார்த புத்தி ந ரே பாப ஸாசே
G D BH
கடே போகணே பாப தே கர்ம கோடே
DH
ந ஹோதா மனாஸாரிகே துக்க மோடே

(தா-ம்) ஓ மனமே! பிறர்பொருளை இச்சியாதே. அதன்மீது புத்தியை கிஞ்சித்தும் செலுத்தாதே. அப்படிக் கில்லையாகில் இகபரத்திலுண்டாகும் அநேக கஷ்டங்களை அனுபவிக்கும் பாபகாரியங்களைச் செய்ய நீ ஈடுபடுவாய். அப்படி அதைச் செய்வதினால் அப்பொருள் கிடைக்காவிடின் ஆசைஹீனனாகி துக்கத்திற்கு ஆளாவாய். ஆகையால் பொருட்சம்பத்தில் முற்றிலும் உன் ஆசையைவிடு.

DH DH DH
10. ஸதா ஸர்வதா ப்ரீதி ராமீ தராவீ
DH D
துக்காசி ஸ்வயே ஸாண்டி ஜீவீ கராவீ
DH DH
தேஹே துக்கதே ஸூக மானீத ஜாவே
DH B
விவேகே ஸதா ஸத்ஸ்வரூபீ பராவே.

(தா-ம்) ஓ மனமே! உனக்கு ஏர்ப்படும் சகல துக்கங்களையும் அகற்றி எப்பொழுதும் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியை மிக்க அன்பு வாய்ந்த பக்தியுடன் பூசை செய். முற்கர்மத்தின் பலனாக ஏர்ப்பட்ட இச்சரீரத்திற்கு உண்டாகும் துக்கத்தை ஒரு உபகாரமாக நினைத்து ஈசன்யார், நான்யார், நான் எதற்காக ஜென்மமெடுத்தேன். நன்கு தீமைகள்யாவை, இவைகளை நீ தனிமையாயிருந்து ஆலோசித்து விவேகத்துடன் ஆத்மஸ்வரூபத்தை தெரிந்துகொள்.

விவேக வைராக்கியத்தைப்பற்றி இதுவரை சொல்லப்பட்டது.

11. ஜனி ஸர்வ. ஸுகீ அஸா கோண ஆஹே
CH DH
விசாரே மனா தூஞ்சி சோதூனி பாஹே

மனா த்வாஞ்சிரே பூர்வசஞ்சித கேலே
BH G
தயாஸாரிகே போகணே ப்ராப்த ஜாலே.

(தா-ம்) ஓ மனமே! நீ தீவிரமாக ஆலோசித்தும் பரிசீலனம் செய்துபார்த்தாலும் அழியாசுகத்தை யடைந்தவன் இவ்வுலகில் காணமுடியாது. உனது பூர்வ கர்ம வாசனையால் இச் ஜென்மத்தில் ஸுக துக்கங்களுக்கு தக்கவாறு அடைகிறாய் என்பதை உன் மனதில் தீர்மானமாக வைத்துக்கொள்.

DH
12. மனா மானவீ துக்க ஆணூ நகோ ரே
CH
மனா ஸர்வதா சோக சிந்தா நகோ ரே
DH B D DH
விவேகே தேஹே புத்தி ஸோடூனி த்யாவீ
DH B G
விதேஹீ பணே முக்தி போகீத ஜாவீ

(தா-ம்) ஓ மனமே! நீ எப்பொழுதும் துக்கத்தையும் அதனாலுண்டாகும் சோகத்தையும் விட்டு விவேகத்துடன் தேகாபிமானங்களைத் தள்ளி இத்திரேகமற்ற நிலையில் பரமேஸ்வரனை தியானித்து பரமானந்தசுகத்தில் உண்டாகும் முக்தியை அடைந்து காலத்தை போக்கு.

13. மனு ஸாங்க பா ராவணு காய ஜாலே
(G)

அகஸ்மாத தே ராஜ்ய ஸர்வை புடாலே
(BH D)

மஹ்ரேனீ குடி வாஸனு ஸாண்டி வேகீ
(D D G)

பளே லாகலா காள ஹா பாடிலாகீ.
(BH G G)

(தா-ம்) ஓ மனமே! மஹா புஜபல பராக்கிரமத்தில் நிகறற்ற ராவணேஸ்வரன் தன் ஸுதந்தரமான ராஜ்ஜியத்தையும், வம்சத்தையும் அடியோடு இழந்ததின் காரணம் யாதெனில் தனது கெட்டகுணத்தாலும் மேலும் துஷ்ட காரியங்களாலு மாத்திரமேயன்றி வேறல்ல. இதை எல்லாமனிதர்களும் ஞாபகம் வைத்து துஷ்ட காரியங்களைத் தள்ளி பகவத் தியானத்தில் ஈடுபடவும். இத்தகைய மார்க்கம் எதற்காக வெனில் எமன் நம் அருகாமையிலேயே யிருக்கிறுன்.

14. ஜீவா கர்மயோகே ஜனி ஜன்ம ஜாலா
(G)

பரி சேவடி காளமூகி நிமாலா

மஹா தோர தே ம்ருத்யுபங்தேசி கேலே
(G)

கிதீயேக தே ஜன்மலே ஆணி மேலே

(தா-ம்) ஓமனமே! பூர்வஜென்ம கர்ம பலத்திற்கு தக்கவாறு ஜீவர் மறுஜென்ம மடைகிறுர்கள். இத்தகைய ஜென்மத்தை நல்ல வழியில் செலுத்தாது வீணுக எமனது கையில் அகப்பட்டு துக்க மனுபவிக்கின்றனர். உலக வாழ்க்கையே மெய் யென்று காலங்களித்த அனேக பெரியோர்களுங்கூட காலனிடம் அகப்பட்டு கஷ்ட மடைந்தும் இப்பொழும் துன்பமடைகின்றனர். இவ்வாருன ஜனங்களின் பிறப்பு இறப்பு கணக்கிலடங்காது.

B

15. மனு பாஹதா ஸத்ய ஹே ம்ருத்யு பூமீ

B

ஜிதா போலதி ஸர்வஹி ஜீவ மீ மீ

சிரஞ்ஜீவ ஹே ஸர்வஹ் மானிதாதி

D

அகஸ்மாத ஸாண்டுனியா ஸர்வ ஜாதி.

(தா-ம்) ஓ மனமே! இவ்வுலகம் உண்மையாகவே காலன் குடி கொண்டது. இப்படியிருக்க நீ அழியாதவன், நீயே எல்லாம். யாவும் என்னுடைய தென்றும், ஜகத் அழியாத தென்றும் நினைக்கிறாய். ஆனால் திடீரென்று மறித்தால் நீ நினைத்தயாவும் பலனில்லாமல், எல்லா சுகபோகங்களும் உண்மை யென்று நினைத்த உன் சரீரத்தை விட்டு எமனுக்கு ஆளாவாய். ஆகையால் ஜனன, மரணம், கிழத்தனம், வியாதி முதலான துக்கங்களினு லுண்டாகும் தோஷங்களை பரிசீலனம் செய்து எப்பொழுதும் உண்மையான ஈஸ்வரதியானத்தில் ஈடுபடு.

DH CH G

16 மரே ஏக த்யாசா துஜா சோக வாஹே

D

அகஸ்மாத தோஹி புடே ஜாத ஆஹே

BH BH

புரேனு ஜனீ லோப ரே க்ஷேப த்யாதே

G G

மஹம்ஞனி ஜனி மாகுதா ஜென்ம நேதே.

(தா-ம்) ஓமனமே! இறந்து போனவர்களைப்பற்றி துக்கிக்கிறாய். நீயு மிறந்தவுடன் அவ்விடத்திற்கே போகிறாய். இதை அறியாது துக்கப்படுதல் வீணேயாகும். லோப முதலான யாவத்தும் மிகக்கெட்டது. இந்த குணத்திற்கு ஒருபோதும் திருப்தி கிடையாது. இந்த ஆத்மாவுக்கு நாச ரூபமான ராக்ஷஸ ஸ்வபாவ மாகிய நரகத்திற்கு காமம், க்ரோதம், லோபமான மூன்று வாசல்களாயிருக்கின்றன. இந்த லோப குணத்தால் ஜனன மரண

உபாதிகளுக்கு ஈடு படுகிறாய். ஆகையால் இப்பாழான துக்கத்தைத் தரும் லோப குணம் உன்னை அணுகாதபடி செய்துக்கொள்.

17. மனீ மானவ வ்யர்த சிந்தா வாஹாதே

அகஸ்மாத ஹோணார ஹோவூனி ஜாதே

G DH BH G G
சடே போகணே ஸர்வஹி கர்மயோகே

DH DH
மதிமந்த தே கேத மானீ வியோகே

(தா-ம்) ஓ மனமே! மனிதர்கள் எப்பொழுதும் பிரயோசன மற்ற சிந்தைகளை வகிக்கிறார்கள். ஆனாலும் பகவத் கிருபையால் அவரவர்களுக்கு தக்கவாறு பலாபலன்கள் கிடைக்கின்றன. பூர்வ கர்மாவிற்கு அனுஸாரம் ஒவ்வொரு காரியம் கைகூடுவதும் கைகூடாததுமான சுக துக்கங்களுக்கு காரணமாவாய். மூட ஜனங்கள் இதையறியாது பொய்யான சுகத்திற்கு மிக்க சந்தோஷமடைவதும் அல்ப துக்கத்திற்கு அதிக விசனப் படுவதுமுண்டு.

18. மனா ராகவ் வீண ஆசா நகோ ரே

மனா மான வாசி நகோ கீர்த்தி தூ ரே

ஜயா வர்ணிதி வேத சாஸ்த்ரே புராணே

G
தயா வர்ணிதா ஸர்வஹி ச்லாக்யவாணே.

(தா-ம்) ஓ மனமே! எப்பொழுதும் நீ ஸ்ரீராம நாமத்தையே செய். வேறுவிதமாக உன் நாவை உபயோகிக்காதே. யாருடைய நாமத்தை வேத சாஸ்திர இதிஹாஸங்கள் கோஷிக்கின்றதோ அப் பகவன் நாமத்தை ஸ்மரிக்கின் உன் ஜென்மம் சாபல்யமாகும். இதை உண்மையென்று நம்பு.

19. மனு ஸர்வதா ஸத்ய ஸோடூ நகோ ரே
D

மனு ஸர்வதா மித்ய மாண்டூ நகோ ரே
D

மனு ஸத்ய தே ஸத்ய வாசே வதாவே
DH

மனு மித்ய தே மித்ய ஸோடூனி த்யாவே.
D DH

(தா-ம்) ஓமனமே! நீ எப்பொழுதும் சத்தியமே கையாள்வாய். அசத்தியத்தை விட்டு விடு. உன் வாக்கினால் எப்பொழுதும் நல்ல வார்த்தைகளை பேசு. பொய் எப்பொழுதும் பொய்யே. இதை முக்காலத்திலும் தள்ளிவிடு.

20. பஹூ ஹிம்புடி ஹோயிஜே மாயபோடீ

நகோ ரே மனு யாதனா தோசி மோடீ.

DH D G B
கிரோதே பசே கோண்டிலே கர்பவாஸி

DH DH BH
அதோமுக ரே துக்க த்யா போலகாஸீ.

(தா-ம்) ஓ மனமே! தாய் கர்ப்பத்தில் ஜீவன் படும் வேதனை சொல்லொணாது. மேலும் இச் ஜீவனது மிக்க மிருதுவான சரீரம் தாயின் ஜாடராக்கினியால் படும் துன்பமும், உஸ்வாஸ நிஸ்வாஸங்களில் ஏர்படும் கஷ்டமும் மிக்க துக்ககரமானது. ஆகையால் இப்பேர்க்கொத்த கர்ப்பவாஸம் மறுபடியுமேர்படா மார்க்கத்தை தேடிக்கொள்.

21. மனு வாஸனா சூகவி யேரஜாரா

D DH DH
மனு காமனா ஸாண்டி ரே தரவ்ய தாரா

G BH
மனு யாதனா தோர ஹோ கர்பவாஸி

BH G
மனு ஸஜ்ஜனா பேடவீ ராகவாஸி.

(தா-ம்) ஓ மித்திரமனமே! பூர்வ ஜன்ம வாஸனையால் ஏற்படும் ஜனனமரணங்களின் சக்கிரத்தினின்று தப்பித்துக்கொள். பெண் பொன் இவைகளில் ஆசையே வேண்டாம். கர்ப்பவாஸத்தினின்று ஏற்படும் எல்லா துக்கங்களினின்றும் தப்புவிக்க ஸ்ரீ ராகவனுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தை கண்குளிர சேவித்து அவருடைய நாமத்தை முழு பிரேமையோடு செய்.

22. மனு ஸஜ்ஜனு ஹீத மாஜே கராவே
G DH D DH
ரகு நாயகா த்ருட சிந்தி தராவே

மஹா ராஜ தோ ஸ்வாமி வாயுஸுதாசா
DH DH
ஜனு உத்தரி நாத லோகத்ரயாசா.

(தா-ம்) ஓ அன்பு வாய்ந்த மனமே! பூ, புவர், ஸ்வர்லோகங்களுக்கும் அதிபதியும், தன்னை வேண்டினோர்களை அனுக்கிரஹிக்கிறவரும், ஸ்ரீ ஆஞ்ஜநேயரின் உபாஸக மூர்த்தியுமான ஸ்ரீ ராகவனை உன் ஹ்ருதயத்தில் வகித்து ஸதாசிந்தனை செய்.

BH G
23. ந போலே மனு ராகவாவீண காஹி
G BH
ஜனீ வாவுகே போலதா ஸௌக நாஹி
G D G D
கடீனே கடி காள ஆயுஷ்ய நேமே்தா
DH
தேஹாந்தி துலா கோண ஸோடு பஹாதே்தா.

(தா-ம்) ஓ மூடமனதே! பரமோத்தமனை ஸ்ரீ ராகவனது குணகீர்த்தனங்களை அபாரமாக சொல்வதைத்தவிர அனுவசியமாக துச்ச விஷயங்களில் பிரவேசித்து வீண்காலம் போக்காதே. பகவன் நாமத்தில் சுகமுண்டேயொழிய வேறு எவ்விஷயத்திலும் புண்யமே இல்லை. ஏனெனில் காலன் ஒவ்வொரு நிமிஷமும் உனது ஆயுளை குறைக்கின்றான். ஆகையால் இப்பஞ்ச பூதங்களாலாக்கப்பட்ட சரீ

ரத்தை விடுங்காலத்தில் உன்னை பரிசுத்திப்பது ஸ்ரீ ராம நாமமே வென்று தெரிந்து கொள்.

G CH
24. ரகு நாயகா வீண வாயா சிணுவே

ஜனுஸாரிசே வ்யர்த கா வோஸணுவே

DH DH DH
ஸதா ஸர்வதா நாம வாசே வஸோந்தே

DH
அஹந்தா மனீ பாபிணீ தே நஸோந்தே

(தா-ம்) ஓ சலன மனதே! பரம தாரகமான ஸ்ரீ ராமநாம தியானத்தைவிட்டு எதர்க்காக வீணாய் கஷ்டப்படுகிறாய். உன்னி லிருக்கும் அங்கார மமகாரங்களை வேரோடு நசிக்கசெய்து உன் வாக்கில் அந்த தாரக நாமத்தையே வாசம்பண்ணும்படிச் செய்.

BH
25. மனுவீட மானு நகோ போலஂயாசா

D G D
புடே மாகுதா ராம ஜோடேல கைஂசா

G D
ஸுகாசி கடி லோடதா ஸங்க ஆஹே

D
புடே ஸர்வ ஜாயில காஹி ந ராஹே.

(தா-ம்) ஓ துஷ்டமனமே! நான் மேற் சொன்ன ஒவ்வொரு மொழிகளையும் அலக்ஷியமாய் தள்ளிவிடாதே. எனெனில் நீ பகவன் நாமத்தை நிராகரித்தால் ஸ்ரீ சீதாகாந்தன் கிருபாகடாக்ஷம் உனக்கு எவ்வாறு கிடைக்கும். நீ சுகமனுபவிக்கும் தருணத்திற் கப்பால் துக்கமேதவிர சுகம் கிடைப்பது துர்லபம். மாயையான இவ்வுலகம் யாதொரு வித்தியாஸமின்றி ஒரேமாதிரியாக விருக்கிறது. மேலும் நீ செய்யும்படியான நற்செய்கைகள் தீய செயல்களால் ஏற்படும் பலாபலன்களை உனது அந்திகாலத்தில் அனுபவிப்பாய்.

26. தேஹோரக்ஷணு காரணே யத்ன கேலா

CH G G
பரி சேவடி காள கேவோனி கேலா

BH
கரி ரே மனு பக்தி யா ராகவாசி

D D BH
புடே அந்தரி ஸோடி சிந்தா பவாசி.

(தா-ம்) ஓ மானமே! ஒருக்ஷணத்தில் நசிக்கும் இச்சரீரத்தை எவ்வளவு கஷ்டத்துடன் போஷித்து காப்பாற்றினாலும் திடீரென்று காலன் ஒருநாள் கொண்டுபோயே தீருவான். அவனாலேற்படும் எல்லா துன்பமும் உனக்கேயன்றி சரீரத்திற்கல்ல. ஆகையால் இதைத் தீர உணர்ந்து ஸ்ரீ ராம நாமத்தை பக்தி சிரத்தையுடன் ஸ்மரணம்செய். இக்கொடிய ஸம்ஸாரத்தைப்பற்றியும் ஜனனமரண விஷயத்தைப்பற்றியும் நீ சற்றும் நினைக்காமல் நிர்மல புத்தியுடன் ஸ்ரீ ராமபக்தியில் ஈடுபடின் சகல துக்கங்களினின்று நிவர்த்தியாகி முக்தியடைவாயென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

BH OH D
27. பவாச்யா பயே காய பீதோஸ லண்டி

DH DH D
தரீரே மனு தீர தாகர்வி ஸாண்டி

G CH
ரகுநாயகா ஸாரிகா ஸ்வாமி சிரீ

BH DH DH DH
நுபேக்ஷி கதா கோபல்யா தண்ட தாரீ.

(தா-ம்) ஓ மானஸ ராஜாவே! சகல லோக ரக்ஷகரான ஸ்ரீதசரததனயன் எப்பொழுதும் உன் பக்கத்திலேயே யிருப்பதினால் இந்த அல்ப ஸம்ஸாரத்தினாலுண்டாகும் பயத்தை விட்டு தைரியமாகவிரு. எச்சமயத்திலாவது எமன் உன்பேரில் கோபங்கொண்டால் லோக சரண்யனான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி உன்னை காத்து ரக்ஷிப்பார்.

இதுவரையில் வைராக்கியத்தாலுண்டாகும் பலனைப்பற்றி சொல்லியது.

DH DH DH
28. தினாதை ஹா ராம கோதண்டதாரி
H DH DH
புடே தேகதா காள போடி தராரி

ஜனா வாக்ய நேமஸ்த ஹே ஸத்ய மானீ
DH
நுபேக்ஷி கதா ராம தாஸாபி மானீ.

(தா-ம்) ஒ மந்தமனமே! அனாதியாயிருப்பவர்களுக்கு நாதனான ஸ்ரீ ராகவன் தன் கையில் கோதண்டத்தை ஸ்வீகரித்து உன் பக்கத்தில் நிற்பதை காலகண்டன் கண்டால் நடுங்குவது நிச்சயம். இந்த உண்மை ஜனங்களுக்கு நன்றாய் விழங்கும். தன்னை ஆச்ரயித்தவர்கள்மீது முழு அபிமானமுள்ளவனானதால் தன் பக்தர்களை ஒருகாலும் கைவிடமாட்டாரென்பது நிச்சயம்.

DH G DH B DH
29. பதி ராகவாசே ஸதா ப்ரீத காஜே
B BH BH
பளே பக்தரீபூசிரி காம்பி வாஜே

புரி வாஹிலி ஸர்வ ஜேணே விமானீ
BH DH DH BH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(தா-ம்) ஒ சஞ்சல மனமே! ஸ்ரீ கௌசல்யா தனயனான ஸ்ரீ ராகவன் காலில் அணிந்திருக்கும் பொற் சதங்கைகளின் குளிர்ந்த சப்தமானது பக்த ரக்ஷணைபொருட்டு காட்டுகிறது. தன் பக்தர்களை உபத்திரவிக்கும் சத்ருவின் சிரஸின்மீது கோதண்டத்தை வைப்பார். திரேதாயுகத்தில் தான் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்து வைகுண்டம் போகும் சமயம் அயோத்தியில் யாதொரு பலனைக் கருதாது தன்னையே மனதிலிருத்திய உத்தமர்களை தன் வீமானத்தில் வைத்து அவர்களுடன் சென்றார். அத்தகைய கருணாஸாகரனான ஸ்ரீ ராகவன் ஒருபொழுதும் தன் பக்தர்களை நிராகரிக்க மாட்டாரென்பதை நீ தெரிந்துகொள்.

30. ஸமர்த்தாசியா ஸேவகா வக்ர பாஹே

BH

அஸா ஸர்வ பூமண்டலீ கோண ஆஹே

ஜயாசி லிலா வர்ணிதி லோக திங்ஹி

DH DH BH

நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(தா-ம்) ஓ மனமே! மஹாகிருபாளுவான ஸ்ரீ ராகவனது பக்தனை யார் துவேஷிப்பார். அப்படி இது வரையில் அவருடைய பக்தர்களை உதாசீனம் செய்யவேயில்லை. பக்த ரக்ஷகனான ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் அமானுஷ்ய காரியங்களை திரிலோகவாசிகள் தோத்திரம் செய்கிறார்கள். அத்தகைய சகல குண சம்பன்னனான பக்தவஸ்ஸலன் ஒருபோதும் தன்னுடைய பக்தர்களை கைவிடமாட்டாரென்பது நிச்சயம்.

DH DH

31. மஹாஸங்கடி ஸோடிலே தேவ ஜேணே

BH G G

ப்ரதாபே பளே ஆகளா ஸர்வகூணே

CH

ஜயாதே ஸ்மரே சைலஜா சூலபாணீ

DH

நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ

(தா-ம்) ஓ மூடமனமே! ஸ்ரீ ராகவன் மஹிமை அபாரமானது. சகல குணங்களுக்கும் ஆலயமாயுள்ளவன். மஹா பராக்கிரமமான ராவணன் தேவர்களை சிறைசெய்தபோது அவனை கொன்று தேவர்களை மீட்கவில்லையா! ஸ்ரீ சங்கரனும் பார்வதியும் இத்தாரகத்தை ஜபித்ததால் திருப்பாற்கடலிலுண்டான ஆலகால விஷத்தை புசித்து ஜகத்தை ரக்ஷிக்கவில்லையா! அவ்விஷத்திலுண்டான தாபத்தை அத் தாரகம் சாந்திசெய்யவில்லையா! எப்பொழுதும் ஸ்ரீராம நாமத்தையும் அதன் குண கீர்த்தியையும் ஜபித்துக்

கொண்டும் பேசிக்கொண்டிருக்கவேண்டும். இப்படிச்செய்யின் ஸ்ரீ ராமச்சந்திரன் பிரசன்னமாவான். ஆகையால் அந்தக்கரண சுத்தியுடன் அந்நாமத்தைச் செய்தால் ஸ்ரீ ராகவன் ஏன் தடுத்தாட் கொள்ள மாட்டான்.

G CH G
32 அகல்யா சிளா ராகவே முக்த கேலே
DH G DH G
பதி லாகதா திவ்ய ஹோவூனி கேலே
CH DH
ஜயா வர்ணிதா சீணலி வேதவாணீ
BH DH DH BH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(தா-ம்) ஓ குழப்ப மனமே! சாபத்தால் பீடிக்கப்பட்டு கல்லா யிருந்த அகலிகை ஸ்ரீராகவனது பாததூளி பட்டதும் சாபவிமோசனமாகி திவ்ய மங்கள சரீரம் முன்னிலும் மிக்க துல்யமாயாக வில்லையா, அத்தகைய திவ்ய பொற்பாத கமலங்களின் அமானுஷ்ய மஹிமையை வேதங்கள் வர்ணித்துக்கொண்டே யிருக்கின்றன. அப்படிப்பட்ட ஸ்ரீராகவன் தன்னை ஆச்ரயித்த பக்த சிகாமணிகளை ஒருபோதும் கைவிடாரென்பது திண்ணம்.

DH CH
33 வஸே மேரு மந்தார ஹே ச்ரிஷ்டிலீலா
CH G G
சசி சூர்ய தாராங்கணே மேகமாளா
DH DH
சிரஞ்ஜீவ கேலே ஜனி தாஸ தோன்ஹீ
DH BH
நுபேக்ஷி கதா ராம தாஸாபி மானீ.

(தா-ம்) ஓ மூட மனமே! நம் திருஷ்டிக்கு தோன்றும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மேகங்கள், மஹம்மேரு, மந்தர பர்வதங்கள் யாவும் பகவத் லீலையே. ஸ்ரீ ராகவனுக்கு மிற்சல பக்தியால் சிரேஷ்டர்களானவும் சிரஞ்சீவித்வமும் வாய்ந்த இரண்டு புனிதர்களாரெனில் ஸ்ரீ மாருதியும், ஸ்ரீ விபீஷணருமாம். குரங்

கினத்தைச் சேர்ந்த மாருதி ஏகாக்கிர சித்தத்துடன் தியானம் செய்ததால் உலகத்தில் அவரது கீர்த்தி விசாலித்து அவரை பூஜிக்கிறார்கள். அவருடைய சரீர பராக்கிரமமும், பிரம்மசாரித்வம், பக்தி, தாரகத்தில் அளவுகடந்த பிரேமை, தாஸத்வம், இத்யாதிகுணங்களவரிடம் பூர்ணமாக விருந்தது. இதைப்போல் ராக்ஷஸ இனத்தைச் சேர்ந்த விபீஷணர் மிக்க ஸாத்வீக குணத்தையும், சத்தியத்திலே திருஷ்டியும், பக்தியில் சிரேஷ்டகுண மடைந்தவரா யிருந்ததால் மஹா அனுசார குணத்தை வாய்ந்த தன் சகோதிரனை ராவணனிட மிருந்து விலகினர். இவைகளை நீ தெரிந்திருப்பதால் ஸ்ரீராம சந்திர மூர்த்தியை எக்காலத்திலும் நிற்மல மனதுடன் அவரை யணுகினல் என் உன்னை நிஷ்கிரஹம் செய்வார். ஒரு போதும் செய்ய மாட்டாரென்பது உண்மை.

BH DH
34 உபேக்ஷா கதா ராமரூபி அஸேஞு
ஜிவா மானவா நிச்சயோ தோ வஸேஞு
CH BH BH
சிரீ பார வாஹேன போலே புராணீ
BH DH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(தா - ம்) ஓ சாந்த மனமே! பக்தர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் ஸ்ரீராமசந்திரனை எவரும் மறக்க மாட்டார்கள். இக்குணத்தைக் கிஞ்சித்து மறியா அஞ்ஞானிகள் அவி விவேகத்தால் பகவானை மறந்து விடுகிறார்கள். இக்கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணவதாரத்திலுங் கூட பகவான் சொல்லிய தென்னவெனில் எவன் பலத்தைக் கருதாது என்னையே தியானிக்கிறானே அவனுக்கு என் போகத்தையும் புனர் ஜென்ம நிவர்த்தியும் நானே தருகிறேனென்று அர்ஜுனனுக்கு உபதேசித்தார். இதே கருத்தை வகித்து ஸ்ரீராம பிரபு தன் பக்தர்களை எப்போதாவது கைவிடுவாரா, இல்லையென்பது கருத்து.

BH
35 அஸே ஹோ ஜயா அந்தரி பாவ தைஸா
DH
வஸே ஹோ தயா அந்தரி தேவ தைஸா
அனன்யாஸ ரக்ஷிதஸே சாபபாணீ
BH DH DH BH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(**தா - ம்**) ஓ சாமர்த்ய மனமே! பக்தர்கள் எந் தெந்த காலத்தில் எவ்வெவ்விதமாக நினைக்கிறார்களோ அவ்வவ்விதமாக ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீரகு நந்தனன் தோன்றி அநேக பக்தர்களை காப்பாற்றிருக்கிறார். அப்பேர்ப்பட்ட குண சீலனான ஸ்ரீ ராகவன் தேகாபிமானத்தை விட்ட அப் பக்தர்களை எவ்வாறு மறப்பான்.

DH DH DH DH
36 ஸதா ஸர்வதா தேவ ஸந்நீத ஆஹே
DH
க்ருபாளுபணே அல்ப தாரிஷ்ட பாஹே
DH DH DH
ஸுகானந்த ஆனந்த கைவல்யதாணீ
BH DH DH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(**த - ம்**) ஓ என் நேச மனமே! ஸ்ரீராகவன் எக்காலத்திலும் நம் பக்கத்திலேயே இருக்கிறார். அக்கிருபாளு தன் பக்தர்களிருதயத்தில் வசித்து சகல விவகாரங்களையும் பார்த்து வருகிறான். பக்தர்களுக்கு திவ்ய மங்கள ஸ்வரூபமாகவும், அவர்களிச்சைக்கு கல்பஹ விருக்ஷமாகவும் உள்ள பகவான் எப்படி கைவிடுவார்.

DH
37 ஸதா சக்ரவாகாவஸி மார்த்தாண்ட ஜைஸா
D G
உடி காலிதோ ஸங்கடி ஸ்வாமி தைஸா
G G
ஹரி பக்திசா காவ காஜே நிசாணீ
DH DH BH
நுபேக்ஷி கதா ராம தாஸாபிமானீ.

(தா - ம்) ஓ என் சிரேஷ்ட மனமே! எவ்விதமாக சூரியன் உதயமாகி ஒவ்வொரு நாளும் சக்ரவாக பக்ஷிகளின் துக்கத்தைப் போக்குகிறனே அதைப்போல் கருணா ஸாகரனான ஸ்ரீராமசந்திர மூர்த்தி தனது பக்தர்களின் கஷ்டங்களை தீர்க்க ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரத்துடன் வந்து சேவை கொடுத்து காத்துரக்ஷிக்கிறான். நாம ஸங்கீர்த்தனம் செய்யும் தன் பக்தர்களின் தொனியை கேட்டு ஆனந்திப்பானே தவிர அவர்களை கைவிட மாட்டான்.

பகவான் பக்தகைவாரி என்பதை நிரூபிக்கப்பட்டது.

38 மனா பிரார்த்தனா தூஜலா ஏக ஆஹே
G
ரகுராஜ தக்கீதஹோஊனி பாஹே
DH DH
அவஞ்ஞா கதா ஹோ யதர்தி ந கீஜே
G
மனா ஸஜ்ஜனா ராகவீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஓ பிரிய மனமே! உனக்கு ஒரு பிரார்த்தனை என்னவெனில் ஸ்ரீராகவனது மங்கள குணங்களை எப்பொழுதும் தியானித்திரு. இதை நீ தயவு செய்து ஆமோதித்து பகவானது திவ்ய சரண கமலங்களில் உன் கருத்தை வைத்தால் உன்னை அந்த தீன தயாளன் தள்ளவே மாட்டார்.

DH
39 ஜயா வர்ணிதி வேத ஸ்ாஸ்த்ரே புராணே
G DH BH
ஜயாசேணி யோகே ஸமாதான பாணே
G DH
தயாலாகி ஹே ஸர்வ சான்சல்ய தீஜே
G
மனா ஸஜ்ஜனா ராகவீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஓ மனமே! எந்த உத்தம புருஷனைப்பற்றி வேத ஆகம, புராண இதிஹாஸங்கள் எப்பொழுதும் கோஷிக்கின்றனவோ, எவனது யோக விபூதியால் மோக்ஷப் பிராப்தியாகிறதோ அந்த வேதமுதற் பொருளான ஜானகி காந்தனுக்கு உன்னுடைய

96 - தத்துவங்களையும் அர்பணம் செய்து அந்த ஸ்வரூபத்திலே லயித்து ஆனந்தி.

40 மனா பாஹிஜே ஸர்வஹீ ஸுக ஜேதே
DH
அதி ஆதரே டே விஜே லக்ஷ தேதே
D
விவேகே குடி கல்பனா பாலடிஜே
G
மனா ஸஜ்ஜனா ராகவீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஓமனமே! உனக்கு எந்த விடத்தில் அளியா சுகம் கிடைக்கு மென்று தோன்றுகிறதோ அவ்விடத்திலேயே உன் லக்ஷியத்தை வைத்திரு. நீ வேண்டாத காரியங்களை தள்ளி பரிசுத்தனாக ஸ்ரீராமனது அழகிய மங்கள ஸ்வரூபத்திலே தியானம் செய்தால் உன்னை அவன் மறவான்.

41 பஹு ஹிண்டதா ஸௌக்கிய ஹோணார நாஹீ
சிணுவே பரி நாதுடே ஹீத காஹீ
BH BH DH
விசாரே பரே அந்தரா போத வீஜே
G
மனா ஸஜ்ஜனா ராகவீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஓ மனமே! நீ பிரையோசனமற்ற விஷயங்களில் வீடு பட்டால் உனக்கு எந்தவித சுகமும் கிடையாது. அப்படிச்செய்யின் திரேக சிரமமே தவிர எள்ளளவு சுகமும் உண்டாகாது. இதை நீ தீவிரமாக விசாரித்து உன் பஞ்சேந்திரியங்களுக்கு போதித்து அகண்ட பிரேமையுடன் ஸ்ரீயப்பதியின் மீது மனதை காட்டு.

BH DH
42 பஹுதாம்பரி ஹோசி ஆதா தராவே
G
ரகுநாயகா ஆபுலேஸே கராவே
DH D BH DH G
திணுநாத ஹே தோடரீ ப்ரீதகாஜே
G
மனா ஸஜ்ஜனா ராகவீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஓ மனமே! எல்லாம் தெரிந்த உனக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும் முக்கியமாக ஒன்று இருக்கிறது. அதை நீ கேட்டு உணர்ந்துகொள். தீன ரக்ஷகனென்று பெயர் வாய்ந்த பக்த பராதீனனான ஸ்ரீராகவனை உன்னில் அடக்கி விட்டால் உன்னைக் கைவிடமாட்டார்.

DH
43 மனா ஸஜ்ஜனா ஏக ஜீவீ தராவே
ஜனீ ஆபுலே ஹீத துவா கராவே
G BH
ரகுநாயகாவீண போலோ நகோ ஹோ
DH
ஸதா மானவீ தோ நிஜத்யாஸ ராஹோ.

(தா - ம்) ஓ சாந்த மனமே! உனது நன்மைக்காக நான் ஒரு வார்த்தைச் சொல்லுகிறேன். பரமாத்மாவை அடைவதற்கு தான் இம்மானிட ஜன்மம் கிடைத்திருக்கிறது. ஆகையால் ஸ்ரீராம நாமத்தைத் தவிர வேறு வீண்பேச்சில் பயன் யாதொன்றும் கிடைத்திடாது.

DH DH
44 மனா ரே ஜனீ மௌனமுத்ரா தராவீ
DH G
கதா ஆதரே ராகவாசி கராவீ
DH DH
நஸே ராம தே தாம ஸோடூனி த்யாவே
G
ஸுகாலாகி ஆரண்ய ஸேவீத ஜாவே.

(தா - ம்) ஏ மானஸ ராஜாவே! பிரையோசனமற்ற வார்த்தைகளைப் பேசி காலத்தை போக்குவதை விட மௌனமாகி ஸ்ரீராகவனது குணானுபவங்களை சிந்தித்துக் கொண்டிருப்பதே மிகவும் உத்தமமானது. எவ்விடத்தில் ஸ்ரீராம பக்தி கிடையாதோ அவ்விடத்தை விட்டு காட்டில் வசிப்பதே நலம்.

G DH BH G

45 ஜயாசேணி ஸங்கே ஸமாதான பங்கே

G

அஹன்தா அகஸ்மாத யேவூனி லாகே

G G D

தயா ஸங்கதீசீ ஜனீ கோண கோடீ

G D

ஜியே ஸங்கதீனே மதி ராம ஸோடீ.

(தா - ம்) ஓ மித்திர மனமே! எவனுடைய சிநேகத்தால் நற்குணங்களை போக்கி கெட்ட குணங்கள் விருத்தியாகுமோ அவனை ஒருபோதும் நேசிக்காதே. ஸ்ரீராம நாமத்தில் எவனுக்கு வெருப்புண்டோ அவனது நேசமும் கோராதே. இவர்களின் சிநேகம் சீக்கிரம் சிரமமன்றி கிடைக்கும். ஆனால் ஸஜ்ஜனங்களின் நட்பு கிடைப்பது வெகு துர்லபம். அப்படி கிடைக்கின் நற்குணங்களடைந்து நற்கதிக்கு பாத்திரமாகலாம்.

GD G G

46 மனா ஜே கடீ ராகவாவீண கேலீ

ஜனீ ஆபுலீ தே திவா ஹானி கேலீ

G

ரகுநாயகாவீண தோ சீண ஆஹே

DH

ஜனீ தக்ஷ தோ லக்ஷ லாவூனி பாஹே.

(தா - ம்) ஓ மனமே! நீ எந்த நிமிஷத்தை ஸ்ரீராமநாம மில்லாது கழித்தாயோ அந்த வேளையை வீணாக போக்கினையென்று நினை. எவனொருவன் எப்பொழுதும் பகவத் குணாதிசயங்களில் அகண்ட சிந்தனையோடிருக்கிறானோ அவன் திருஷ்டியில் சர்வ காலங்களிலும் பகவத் ஸ்வரூப ஸந்தானம் கிடைக்கிறது.

இதுவரையில் ஸத் ஸங்கத்தால் உண்டாகும் பலனைப்பற்றி சொல்லியிருக்கிறது.

47 மனீ லோசனீ ஸ்ரீஹரி தோசி பாஹே
G BH
ஜகீ ஜாணதா பக்த ஹோறவூனி ராஹே
G DH
குணீ ப்ரீதி ராகே க்ரமூ ஸாதனுசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸ்ர்வோத்தமாசா.

(த - ம்) நன்மனமே! எவன் தன் நிர்மல ஞானதிருஷ்டியால் உள்ளும் புறமும் பகவத் ஸ்வரூபத்தையே ஸேவை செய்து கொண்டிருப்பானே அப்பேர்ப்பட்ட ஞானியின் சகல நடவடிக்கைகள் நல்ல விஷயத்திலேயே யிருக்கும். அவன் மிக்க அன்புடன் எவ்விடத்திலும் நாம ஸங்கீர்த்தனம் செய்து இவ்வுலகில் பக்தர்களுக்கெல்லாம் சிரேஷ்டனுக விருப்பான்.

DH DH BH
48 ஸதா தேவகாஜீ ஜிஜே தேவ ஜ்யாசா
DH DH
ஸதா ராமநாமே வதே நித்ய வாசா
DH DH
ஸ்வதர்மேசி சாலே ஸதா உத்தமாசா
G DH DH
ஜகி தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(த - ம்) ஓ மனமே! எவன் தனது சரீரத்தை பகவானுக்கு அர்ப்பணம் செய்வானே, அதாவது தேவகாரியத்தில் உழைப்பு, மேலும் எப்பொழுதும் தாரக நாமத்தை செய்துகொண்டு, தன் காரியத்தை கிரமமாக அனுசரிக்கிருனே அத்தகைய பாகவதன் இவ்வுலகில் பவித்திர னென்றே சொல்ல வேண்டும்.

DH BH
49 ஸதா போலண்யா ஸாரிகே சாலவாஹே
DH DH
அநேகீ ஸதா ஏக தேவாஸி பாஹே
G BH CH BH
ஸகூணீ ஜபே லேச நாஹி ப்ரமாசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஒ மனமே! எல்லா குணங்களிலும் மிக்கசிரேஷ்ட குணம் யாதெனில் சொல்லுகிறபடி நடப்பது. அப்படி ஆசாரத்தி லும், விசாரத்திலும், உச்சரணையிலும் சிரத்தையுடன் பக்தி உண்டா கிறதோ, நிற்க அநேகத்தில் ஏகத்துவம் எவனுக்குண்டாகிறதோ அவனே ஞானத்தோடு சகுண உபாஸனையில் ஈடுபட்ட மிக்க உத்தமனான ஸ்ரீராமபக்தனே இஜ்ஜெகத்தில் துல்யனென்றே நினைக்க வேண்டும்.

50 நஸே அந்தரீ காம நாஞவிகாரீ
DH
உதாஸீன ஜோதாபஸி ப்ரஹ்மசாரி
CH
நிவாலா மனீ லேச நாஹி தமாசா
G DH DH
ஜகி தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(மா - த) ஒ மனமே! எவன் நிஷ்காமத்துடன் பிரஹ்மச்சாரி யாய் எவ்வஸ்துவிலும் நிராசையோடு தபோமார்க்கத்தி லிருப்ப வனாய் எப்போதும் ராஜஸம், தாமஸ முதலிய குணங்களுக்கு இடங் கொடாது ஸாத்வீகமே நிறம்பியிருக்கும் ஸ்ரீராமபக்தனே இவ்வுல கில் மிக்க புனிதனென்று நினைக்கவேண்டும்.

DH D BH
51 மதே மஸ்ஸரே ஸாண்டிலீ ஸ்வார்த்தபுத்தி
BH
ப்ரபஞ்சிக நாஹி ஜயாதே உபாதி
DH BH
ஸதா போலணே நம்ர வாசா ஸுவாசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஒ மனமே! எவன் மத மாச்சர்யங்களையும், சுய நலத்தை பாராட்டாது லோபம் முதலான துர்குணங்களை விட் டிருப்பானோ அவனே இப்ரபஞ்சமாயையால் ஒன்றும் செய்யமுடி

யாது. மேலும் மிக்க பிரேமையோடு அவனது சொற்களை இவ்வுலகத்தார் கேட்டானந்திப்பதுடன் மற்ற லோகங்களிலும் அவனுடைய கீர்த்தி பரவும்.

DH
52 க்ரமீ வேள ஜோ தத்வசிந்தா னுவாதே
DH DH DH DH
ந லிம்பே கதா தம்ப வாதே விவாதே
DH G
கரீ ஸு²கஸம்வாத ஜோ ஊகமாசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஓ மனமே! சுருதியில் சொல்லப்பட்ட மஹாவாக்கியங்களான "தத்வமசி" அது நானுவேன் என்பதும் "ப்ரஹ்மாஸ்மி" நான் பிரஹ்மம், இவைகளைச் சிந்தித்தும், தான் சொல்லும் ஸத் மொழிகளை பிறர் சொல்லச்செய்தும், டம்பம் என்ற கோரதத்துவத்தைவிட்டு, வாத விவகாரங்களினின்றும் விலகி, தத்துவ விசாரணை செய்யும் இத்தியாதி குணங்கள் வாய்ந்த அவ்வாத்ம ஞானியான ஸ்ரீராம பகதன் இவ்வுலகில் மிக்க சிரேஷ்டமானவனென்று நினைக்கவேண்டும்.

DH
53 ஸதா ஆர்ஜவீ ப்ரிய ஜோ ஸர்வ லோகீ
DH DH DH
ஸதா ஸர்வதா ஸத்யவாதி விவேகீ
BH DH
ந போலே கதா மித்ய வாசா த்ருவாசா
DH DH
ஜகீ தனய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஓ மனமே! எல்லோரும் சந்தோஷமடையும்படி நடப்பவனும், எல்லாருடைய பிரேமைக்கு பாத்திரனுனவனும், ஸத்யவந்தனுமாகவும், இக்குணங்களுடைய விவேகோத்தமன் சர்வலோக ரக்ஷகனுன ஸ்ரீ ராமச்சென்திரமூர்த்தியின் பக்த சிரேஷ்டனென்றே நினை.

DH
54 ஸதா ஸேவி ஆரண்ய தாருண்யகாளீ
DH
மிளேனு கதா கல்பனேசேணி மேளீ
DH D
சளேனு மனீ நிச்சயோ த்ருட ஜ்யாசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஒ மங்களமனமே! புத்தியறிந்த பிராயத்தில் தப முதலிய நற்காரியங்களுக்கு காட்டையடையலாமென்று நினைப்பவனும், இதர விஷய சுகங்களில் ஈடுபடாமல் சஞ்சலத்தைப்போக்கி திடமனதுடனிருப்பானோ அவன் ஸ்ரீராம பக்தனுவான்.

காட்டையடைவதின் காரணம் என்னவெனில் பரிசுத்தமான இடத்தில் தனித்திருப்பதால் நிர்மல புத்தியும், பசிக்காக அங்கு கிடைக்கும் ஆகாரங்களை மிதமாக சாப்பிட்டுக்கொண்டும், மனம், வாக்கு, சரீரம் இவைகளை ஒன்றுசெய்து ஏகாக்கிர சித்தத்துடன் வைராக்கியத்தை சாதிப்பதற்கு தகுந்தவிடம்.

CH DH CH
55. நஸே மானஸி நஷ்ட ஆசா துராசா
CH CH
வஸே அந்தரீ ப்ரேமபாசா பிபாசா
DH BH BH
ருணீ தேவ ஹா பக்தி பாவே ஜயாசா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஒ மனமே! எவனுக்கு பேராசை கிடையாதோ எவன் பக்தியில் மிகக ஆசைகொண்டு அக்காரியத்திலீடுபட்டு பகவானை அடையவழி தேடுவானோ அப்பேர்பட்டவன் ஸ்ரீயப்பதியின் உத்தம பக்தனென்று நினை.

DH DH
56 திஞசா தயாளு மஞசா மவாளு
DH
ஸ்நேஹாளு க்ருபாளு ஜனி தாஸ பாளு
DH
தயா அந்தரீ க்ரோத ஸந்தாப கைஞ்சா
G DH DH
ஜகீ தன்ய தோ தாஸ ஸர்வோத்தமாசா.

(தா - ம்) ஓ கருணை மனமே! எளியர்களிடத்தில் கிருபையும், நிர்மலமனதும், சர்வ பூதங்களிடத்தும், பகவத் பக்தர்களிடத்தும் அதிக வாஞ்சையும், கருணையும், குரோதம், தன்னைத்தான் நொந்து கொள்ளலென்ற மிக்க பாதகமான இவ்விரண்டு குணங்களையும் வேரோடறுத்தவனும் ஸ்ரீராம பக்தனென்று சொல்லலாம். மேலும் ஸாது சந்தனென்றும் நினைக்கலாம்.

இதுவரையில் சகுண தியானத்தைப்பற்றியும் அதன் பலத்தைப்பற்றியும் சொல்லப்பட்டது.

G DH
57 ஜகீ ஹோயிஜே தன்ய யா ராம நாமே
DH
க்ரியா பக்தி ஊபாஸஞ நித்ய நேமே
DH
உதாஸீனதா தத்வதாம் ஸார ஆஹே
DH DH
ஸதா ஸர்வதா மோகளீ வ்ருத்தி ராஹே.

(தா - ம்) ஓ புண்யமனமே! இவ்வுலகில் தாரகமே மிக்க மஹிமையுடையது. பக்தி உபாஸனை, நித்ய நேமத்துடன் ஸ்ரீராம நாமத்தை எவ்வித இடையூர் வரினும் திடமுடன் செய்யச்செய்ய பகவத் கிருபைக்கு பாத்திரனானவன் ஸ்ரீராமபக்தனுவான். இதற்கு பிரமாணம் வேடரான வால்மீகி தாரகத்தை சரியாக உச்சரிக்கத்

தெரியாது தனக்கு அனுபவமான "மராமரா" வென்று சிந்தையை அப்பொருளில்வைத்து நிர்மல மனதுடன் சொல்லச் சொல்ல அவ் வார்த்தையே தாரகமாகியதும் **ஸ்ரீ** ராகவன் கிருபை புரிந்து பிற் காலத்தின் தனது லீலைகளை முன்னரே ராமாயண ரூபமாகவெழுத அனுக்கிரகிக்கவில்லையா.

58 நகோ வாஸனா வீஷயீ வ்ருத்திரூபே
DH D
பதார்த்தி ஜடே காமனா பூர்வ பாபே
DH
ஸதா ராம நிஷ்காம சிந்தீத ஜாவா
CH
மனா கல்பனாலேச தோஹீ நஸாவா.

(தா - ம்) ஓ மித்திர மனமே! உலகத்திலுள்ள சகல வஸ்து கல்பனையும், பூர்வ கர்மங்களினாலுண்டாகும் வாஞ்சையுமான இத் துர்க்குணங்களைவிட்டு எப்பொழுதும் நிராசையுடன் **ஸ்ரீ** ராம நாமத்தை செய்துகொண்டிருந்தால் பகவத் கிருபைக்கு ஆளாவாய்.

59 மனா கல்பனா கல்பிதா கல்ப கோடீ
BH
நஹ்வே ரே நஹ்வே ஸர்வதா ராமபேடீ
மனீ காமனா காம நாஹீ ஜயாலா
D
அதீ ஆதரே ப்ரீதி நாஹீ தயாலா.

(தா - ம்) ஓ மனமே! நீ உலக விஷய கல்பனையில் கட்டுண் டால் உனக்கு **ஸ்ரீ** ராகவனது தரிசனம் மிக்க துர்லபம். எவனது சித்தம் விஷயங்களிலீடுபடுகிறதோ அவனுக்கும் பகவத்கிருபை கிடைக்காதென்பது நிச்சயம்.

DH
60 மனா ராம கல்பத்தரூ காமதேனூ
DH
நிதீ ஸார சிந்தாமணீ காய வானூ
G G D
ஜயாசேணி யோகே கடே ஸ்ர்வ ஸத்தா
தயா ஸாம்யதா காயஹீ கோண ஆதா.

(தா - ம்) ஓ மனமே! கல்பத்தருவாகவும், காமதேனுவாகவும் மிக்க நிதியாகவும், எல்லா பொருளுக்கும் ஸாரமாகவும், பக்த சிந்தாமணியாகவுமான ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் கட்டளையால் உற்பத்தி ஸ்திதி, லயமான முத்தொழிலும் நடந்து வருகிறது. ஆகையால் இக்குணசீல மஹாத்மாவான ஸ்ரீ ராகவனுக்கு ஸமத்துவமாக யாரைச்சொல்ல முடியும். இணையற்ற பொருளென்பது கருத்து.

BH DH
61 உபா கல்பவ்ருஷாதளீ துக்க வாஹே
DH
தயா அந்தரீ ஸர்வதா தோன்சி ராஹே
DH D
ஜனீ ஸஜ்ஜனீ வாத ஹா வாடவாவா.
D G DH
புடே மாகுதா சோக ஜீவீ தராவா.

(தா - ம்) ஓ மனமே! கல்பகவிருக்ஷத்தினடியிலிருந்து துக்கிக்கிறவனுக்கு எப்பொழுதும் துக்கமேதவிர வேறு அவனுக்கு பிராப்தமாகாது. அதைப்போல் ஸத்ஸங்கத்திலிருந்து வீண்வாதம் செய்பவனுக்கு இவ்வுலகில் துக்கத்திற்காளாவானே தவிர சுகம் எள்ளளவும் கிடைப்பது மிக்க அறிது.

G
62 நிஜத்யாஸ தோ ஸர்வ தூடோனி கேலா
B CH
பளே அந்தரீ சோக ஸந்தாப டேலா
DH DH BH DH BH D
ஸுகானந்த ஆநந்த பேதே புடாலா
DH D
மனீ நிச்சயோ ஸர்வ கேதே உடாலா.

(தா - ம்) ஓ மனமே! எப்பொழுதும் நற்காரியங்களையும், ஸ்வரூபானுஸந்தானத்தையும் சாவதானமாக முறையே அனுசரிக்காவிடில் பேத பாவனைகளுக்கும் அதனால் உண்டாகும் துக்கங்களுக்கும் பிராப்தமாகி சுகானந்தத்தை இழப்பாய். ஆகையால் சஞ்சலமின்றி ஆத்ம தத்துவத்தில் திருஷ்டிவைப்பாயாகில் அந்த நிர்மலப் பொருளுக்கு பிராப்தியாவாய்.

G DH D G
63 கரீ காமதேனூ புடே தாக மாகே
BH DH DH
ஹரீபோத ஸாண்டுனி வீவாத லாகே
D
கரீ ஸார சிந்தாமணீ காசகண்டே
DH D
தயா மாகதா தேத ஆஹே உதண்டே.

(தா - ம்) ஓ மனமே! உன்னிடத்தில் எல்லா சாமர்த்தியம் வாய்ந்த ஆத்மாராமனிருக்கும்பொழுது அவனை நினைக்காது மற்ற வேறு விவகாரங்களில் திருஷ்டி வைத்து வாத விவாதங்களில் புத்தியைசெலுத்தி எவ்வழி முக்திதருமென்று உழலுகிருனே அவன் தன்னிடத்தில் வெண்ணையை வைத்துக்கொண்டுநெய்யிற்கு அலேந்தவன் போலும், நினைத்ததைக்கொடுக்கும் காமதேனுவை வீட்டில் வைத்துக்கொண்டு தயிறுக்காக சென்றவன்போலுமாகி முடிவில் காலனுக்கு ஆளாகிருன். ஆகையால் பக்தியிலீடுபட்டு ஆத்மதத்துவத்தை தெரிந்துக்கொள்வது மிக்க அவசியம்.

D DH D BH
64 அதீ மூட த்யா த்ருட புத்தி அஸேனு
அதீ காம த்யா ராம சிந்தீ அஸேனு
BH BH
அதீ லோப த்யா க்ஷோப ஹோயீல ஜாணு
DH
அதீ வீஷயீ ஸர்வதா தைந்யவாணு.

(தா - ம்) ஓ மனமே! உலகில் தீவிர பகவத் சிந்தையோடிருந்தால் முக்தி அடையலாம். எவனுக்கு இந்த புத்தி இல்லையோ அவனை மூடனென்றே எண்ணவேண்டும். ஸம்ஸாரத்தில் மிக்க ஈடுபட்டவன் அப்பாசத்தில் மூழ்கிவிடுவான். மேலும் ஈஸ்வரபக்தியிலீடுபட காலமிராது. மனோதிடமும், பரமாத்தம புத்தியும், பக்தி விசாரமும் இழந்து அதிலோபத்தில் ஆழ்ந்தி துக்கத்தையே அடைவான்.

DH G
65 நகோ தைன்யவாணே ஜிணே பக்திஊணே
DH DH DH
அதீ மூர்க த்யா ஸர்வதா துக்க தூணே
DH
தரீரே மனு ஆதரே ப்ரீதி ராமி
DH
நகோ வாஸனு ஹேமதாமி விராமி.

(தா - ம்) ஓ மனமே! யாரிடத்தில் பக்தியுள்ளதோ அவனே தன்னியன். எவனிடத்தில் பக்தி சூன்யமோ அவன் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டு வீடு, தனம், மக்கள் முதலியன சற்வ சுகங்கள் தருவனவென்று நம்பி மோசம் போனதால் துக்கமே பிராப்தியாகிறது. ஆகையால் மேற்கண்ட பாசங்களைவிட்டு ஸ்ரீராமநாமத்திலீடுபடு. மோக்ஷத்திற்கு பிராப்தியாவாய்.

G
66 நஹ்ரவே ஸார ஸம்ஸார ஹா கோர ஆஹே
DH
மனு ஸஜ்ஜனு ஸத்ய சோதூனி பாஹே
D
ஜனீ வீஷ காதா புடே ஸூக கைன்சே
DH G
கரீ ரே மனு த்யான யா ராகவாசே.

(தா - ம்) ஓ மனமே! ஸம்ஸாரமென்பது அர்த்தான துக்கமயமாயும், மிக்க பயங்கரமாகவு மிருக்கிறது. ஆகையால் ஸத்யமென்பதை பரிசீலித்து பார்க்கவேண்டும். இது எப்படியெனில் அமிர்த்தை இழந்து விஷய சுகங்களான விஷத்தை புசிப்பது போலாகும். ஆகையால் நித்ய நிரஞ்சனனை ஸ்ரீராகவனை அடிக்கடி சிந்தித்திருக்கின் முக்தியடையலாம்.

G
67. கனச்யாம ஹா ராம லாவண்யரூபீ
DH G BH
மஹா தீர கம்பீர பூர்ணப்ரதாபீ
கரீ ஸங்கடீ ஸேவ கான்சா குடாவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ மனமே! அதிகாலையிலெழுந்து மேகவர்ண, லாவண்ய ஸ்வரூபா, தீனதயாளோ, கம்பீரா, பூர்ணப்பிரதாபி, பக்தவஸ்ஸலா, இன்னும் பல நாமத்தினுலும், சங்கடகாலத்தில் பக்தர்களை தடுத்தாட்கொள்பவனுன இச் சிறந்த குணங்களுடைய ஸ்ரீராகவனை ஸ்திரமாக மற்றவிஷயத்தில் புத்திசெலுத்தாது பிரார்த்தனை செய்ய வழிபடு. இம்மார்க்கத்தைத் தவிர வேறு எவ்வழியும் உன்னை ஸ்திரப்படுத்த முடியாதவைகள்.

இந்த ஸ்லோகம் வரையில் நிஷ்காம பக்தியைப்பற்றியும் வாதத்தால் கிடைக்கும் பலனைப்பற்றியும் சொல்லப்பட்டது.

BH G DH DH
68 பளே ஆகளா ராம கோதண்டதாரீ
மஹாகாள விக்ராள தோ ஹி தாரீ
D
புடே மானவா கிங்கரா கோண கேவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓமனமே! மிக்க புஜபலபராக்கிரமத்தோடுகோதண்டத்தை கையிலேந்தி எல்லா தேவர்களுக்கும் ஆதிதேவனுக நிற்கும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை காலன் பார்த்து நடுங்குகிறுன். ஸர்வ திக்குகளிலுமுள்ள தேவர்களும், மஹருஷிகளும், சித்தர்களும், இந்திரலோகத்திலுள்ளவருமான யாவரும் பூஜிப்பதென்றுல் மனிதர்களாகிய நமது சமாசாரம் என்ன சொல்வது. அவனையே முக்காலத்திலும் நினைக்கவேண்டுமென்பது கருத்து.

DH BH
69 ஸுகானந்தகாரீ நிவாரீ பயாதே
BH BH BH
ஜனீ பக்திபாவே பஜாவே தயாதே
விவேகே த்யஜாவா அனுசார ஹேவா
DH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ மனமே! ஸ்ரீராகவன் விஷய மோக பயத்தை அகற்றி ஆனந்தத்தை கொடுப்பான். ஆகையால் அதிகாலையி லெழுந்து ஸ்ரீராகவனது சரணகமலங்களில் லயித்து பிரபஞ்ச விஷயத்தில் புத்தியை அனுசாரத்தில் செலுத்தாது அவனது நாமத்தையே பஜித்தால் நிறதிசய சுகத்திற்கு பிராப்தமாவாய்.

DH DH
70 ஸதா ராமநாமே வதா பூர்ண காமே
DH BH DH DH
கதா பாதிஜே நாபதா நித்யநேமே
DH DH
மதாலஸ்ய ஹா ஸர்வ ஸோடூனி த்யாவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ மனமே! பூர்ண பிரேமையுடன் ஸ்ரீ ராம நாமத்தைச் செய்தால் உன்மனக்கோரிக்கைகளை தீர்ப்பது ஸ்ரீராகவனது பொருப்பு. நாமஸ்மரணையால் அநேக பக்தர்களின் சங்கடங்களினின்றும் ரக்ஷித்து சுகத்தில் ஈடுபடச்செய்யும் மகிமை அதற்குண்டு. ஆகையால் தான் என்னும் அகங்காரத்தைவிட்டு தினசரி அதிகாலையிலெழுந்து ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை சிந்தனைசெய்.

DH
71 ஜயாசேணி நாமே மஹாதோஷ ஜாதீ
G
ஜயாசேணி நாமே கதீ பாவிஜேதீ
G D
ஜயாசேணி நாமே கடே புண்ய டேவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ என் அருமை மனமே! நாமத்தின் மஹிமை இன்னும் சொல்கிறேன் கேள். பிரஹ்மஹத்தி முதலான தோஷங்கள் சூரியனைக்கண்ட பனிபோல் விலகும். மேலும் பிராணிகள் நிஷ்பாபியராவார். கடைசியாக உத்தமபதவி அவர்களுக்கு பூர்ணமாக கிடைக்கிறது. அனேக ஸாது ஜனங்கள் இந்நாம மஹிமையை

ன்றுயுணர்ந்து அனுபவித்திருக்கிறார்கள். ஆகையால் தினசரி அதிகாலையிலெழுந்து ஸ்ரீராம நாமத்தை சலனமற்று செய்.

DH G
72 ந வேசே கதா க்ரந்திசே அர்த்த காஹி
முகே நாம உச்சாரிதா கஷ்ட நாஹி
G CH
மஹா கோர ஸம்ஸார சத்ரூ ஜிஞவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ சஞ்சல மனமே! நாமோச்சாரணம் மிக்க சுலபமான ஸாதனம். அதற்கு தேக சிரமமும் பொருட்செலவுமில்லை. இதை அனுஷ்டிக்க எங்கும் போகவேண்டியதில்லை. எச்சமயத்திலும் எவ்விடத்திலும் இதைச் செய்யலாம். இவ்வனுஷ்டானத்திலிருந்து உண்டாகும் காரண காரியங்கள் அபாரம். அகண்ட நாமஸ்மரணம் செய்யின் மிக்க பயத்தையும் துக்கத்தையும் கொடுக்கும் ஸம்ஸாரத்தின் உபாதி நீங்கிவிடும். ஆகையால் இச்சுலப மார்க்கத்தை நழுகவிடாது அதிகாலையிலெழுந்து துல்யமனதுடன் நாமஸ்மரணம் செய்.

DH DH D DH
73 தேஹேதண்டணேசே மஹா துக்க ஆஹே
DH G
மஹா துக்க தே நாம கேதா ந ராஹே
DH DH DH
ஸதாசிவ சிந்தீதஸே தேவதேவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா - ம்) ஓ மனமே! யோகம், ஙிதித்யாஸம் முதலியவை திரேகத்திற்கு சிரமமும் துக்கத்தையும் கொடுக்கும் சாதனங்கள். ஆனால் மிக்க மகத்தான நாமஸ்மரணத்தில் இக்கஷ்டங்கள் யாதொன்றுமில்லை. இதைச் செய்யச் செய்ய மஹா துக்கங்கள் பிரகாசத்தைக்கண்ட இருள்போல் பறந்தோடும். துக்கங்கள் விலகினால் சுகத்திற்கு வழியுண்டாகி சாந்தமடையலாம். தேவர்களுக்கு

தேவனுன ஸ்ரீ ராகவனது தாரகத்தை ஸ்ரீ சங்கரன் எப்பொழுதும் ஸ்மரிக்கிருர். ஆகையால் அர்ஞேதயத்திலெழுந்து தேகசுத்தி செய்து அந்நாமத்தை நிர்மல புத்தியுடன் செய்வாயாக.

74 பஹு தாம்பரீ ஸங்கடே ஸாதனுசி
வ்ரதே தான உத்யாபனே தீ தனுசி
திஞசா தயாளு மனீ ஆடவாவா
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா-ம்) ஓ நிற்மல மனமே! இன்னும் சொல்லுகிறேன்கேள். ஹடயோகம் செய்ய முயன்ருல் இடையூருகள் உண்டாகிறது. மேலும் விரதங்கள், தானம், உத்யாபனம், மற்ற இதர நேமங்களுக்கு திரவியம் மிக்க அவசியம். இச்சங்கடங்களெல்லாம் நாமஸ்மரணேயில் கிடைத்திடாது. ஏழைகளுக்கும் தனவந்தர்களுக்கும் உரித்து. ஆகையால் கிருபாஸாரகனுன ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் நாமத்தை உதயத்திதெழுந்து ஒரே விருத்தியோடு செய்.

75 ஸமஸ்தாமத்யே ஸார ஸாசார ஆஹே
களேனு தரீ ஸர்வ சோதூன பாஹே
ஜிவா ஸம்சயோ வாவுகா தோ த்யஜாவா
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா-ம்) ஓ மனமே! எல்லா சாதனேபாயங்களில் மிக்க சிறந்தது நாமஸ்மரணேயே. இதை நீ தெரிந்து கொள்ளாவிட்டால் வேதம், ஸாஸ்திரம், புராணம், இதிகாசங்களை முறையே பரிசீலித்து பார்த்தால் இதன் மஹிமை நன்ருய விழங்கும். இவைகளை சோதித்துப்பார்க்காது மூடத்தனமாயிராது தினசரி அதிகாலேயிலெழுந்து ஸ்ரீ ராமநாமத்தைச் செய்.

DH G
76 நஹ்ரவே கர்ம நா தர்ம நா யோக காங்ஹி
BH G G G
நஹ்ரவே போக நா த்யாக நா ஸங்க பாஹி
DH DH
மஹ்ஞே தாஸ விஸ்வாஸ நாமீ தராவா
BH
ப்ரபாதே மனீ ராம சிந்தீத ஜாவா.

(தா-ம்) ஓ மனமே! கர்மம், தர்மம், யோகம், போகம், த்யாகம் இவைகளினுல் யாதொரு பயனும் கிடைத்திடாது. பிறகு நாம மஹிமையில் விஸ்வாஸமில்லாதவனது கெதி என்னே. இக்கலியில் மிக்க சுலபசாதனையானது நாமஸ்மரணைத்தவிர மற்றொன்றுமில்லை. ஆகையால் ஸாது ஜனங்களால் அனுஷ்டிக்கப்பட்ட அந்த ஒப்பற்ற நாமத்தையே அதிகாலையிலெழுந்து பல சிந்தனைகளுக்கிடங் கொடாது தீவிரமாக செய்.

இதுவரையில் மிக்க சிரேஷ்டமும் துல்யமுமான ஸ்ரீராம நாமத்தை மறவாது செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது.

G
77 கரீ காம நிஷ்காம யா ராகவாசே
கரீ ரூப ஸ்வரூப ஸர்வா ஜிவான்சே
DH DH DH G G
கரீ சேத நிற்த்வந்த்வ ஹே கூண காதா
ஹரீகீர்த்தனீ வ்ருத்திவிஸ்வாஸ ஹோதா.

(தா-ம்) ஓ மனமே! விஷய உபாதிகளையகற்றி ஸ்ரீராகவனை நிஷ்காமத்துடன் வழிபடு. இதைத்தான் பக்தகோடிகள் அனுஷ்டித்தது. அப்படிச் செய்வதால் எல்லா ஜீவர்களிலும் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி வியாபித்திருப்பதாகவும் எல்லாம் ஸ்ரீராமமயமென்ற தத்துவத்தை அறிந்து அந்நாமத்தையே அன்புடன் அனுஷ்டிக்கின் சர்வ கஷ்டங்களும், பாசமும் அறுந்து பக்த சிரேஷ்டப்பதவி கிட்டும். இதையே கீதையில் சிராசையோடு என்னிடம் லீனமாயும் பக்தி

யோடுசெய்யும் எக்கருமங்களும் எனக்கே அர்ப்பணம் செய்வானோ அவன் கடைசியில் என்னைய அடைகிறான்.

78 அஹோ ஜ்யா நரா ராம விஸ்வாஸ நாஹி
BH DH
தயா பாமரா பாதிஜே ஸர்வ காஹி
DH
மஹாராஜ தோ ஸ்வாமி கைவல்யதாதா
DH
வ்ருதா வாஹணே தேஹசம்ஸார சிந்தா.

(தா-ம்) ஓ மனமே! எந்த மனிதன் அஞ்ஞானத்தாலும், எல்லாம் நமதென்ற மௌடிகத்தாலும் ஸ்ரீ ராமசந்திரனிடம் விஸ்வாஸமில்லையோ அவன் விஷய சுகத்தில் ஆழ்ந்தி துக்கமே அனுபவிப்பான். பகவான் தீனர்களிடத்தில் மிகக வாஞ்சல்ய முடையவனென்று நினைக்காது ஸம்ஸாரமே சர்வ சுகமென்று பாவிப்பவன் மஹா துக்கத்திற்கு ஆளாகி ஸ்ரீராமனுடைய கிருபைக்கு பாத்திரனாகானென்பது திண்ணம்.

BH G
79 மனா பாவனா பாவனா ராகவாசீ
DH D BH
தரீ அந்தரீ ஸோடி சிந்தா பவாசீ
BH BH
பவாசீ ஜிவா மானவா பூளி டேவீ
DH G
நஸே வஸ்துசீ தாரணா வ்யர்த்த கேலீ.

(தா-ம்) ஓ மனமே! நீ ஸம்ஸார விஷயவாஸனைகளை பொருட்செய்யாது உன்னுடைய துல்யமான குணத்துடன் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியை உன்னில் வைத்து தியானம்செய். ஏனெனில் தேகம், வீடு, மனைவி, மக்கள், பொருள் இவைகளில் ஈடுபடுவதால் அஞ்ஞானமே உண்டாகும். இவ்வஞ்ஞானத்தால் ஈஸ்வரபக்தி கிஞ்சித்துமில்லாது துக்கமே குடிகொண்டு சத்சித் ஆநந்தரூப ஸ்ரீ ராகவனது கிருபை கிஞ்சித்தும் கிடைத்திடாது.

DH

80 தரா ஸ்ரீவரா த்யா ஹரா ஆந்தராங்தே

DH G

தரா துஸ்தரா த்யா பரா ஸாகராங்தே

BH DH BH

ஸரா வீஸரா த்யா பரா துர்பராங்தே

கரா நீகரா த்யா கரா மத்ஸராங்தே.

(தா-ம்) ஓ மந்த மனமே! ஸாத்ஷாத் சங்கரனது ஹிருதயத்தில் வசிக்கும் லக்ஷ்மிபதியான ஸ்ரீராமசந்திரனை உன்னுள்ளில் வைத்து உன்னைப்போலவே செய்து நிம்மதியாக வயிற்றுக் கவலையின்றியும் துஷ்ட விவகாரங்களுக்கு இடங்கொடாது மிருக்கின் ஸம்ஸார ஸாகரத்தினின்றும் மீளுவாய். இதில் ஒரு விசேஷம் என்னவெனில் ஸ்ரீயப்பதியை ஹிருதயத்தில் வைக்க லக்ஷ்மியுங்கூட வந்தமர்வாளாகில் பூர்ண பிராப்தி கிடைப்பதைப்பற்றி சந்தேகமே கிடையாது.

இதுவரையில் ஸ்ரீராமசந்திரனிடத்தில் தடஸ்த விஸ்வாஸம் வைப்பதைப்பற்றி சொல்லப்பட்டது.

D

81 மனு மத்ஸரே ராம ஸாண்டு நகோ ஹோ

DH DH

அதீ ஆதரே ஹா நிஜத்யாஸ ராஹோ

DH

ஸமஸ்தாமதே நாம ஹே ஸார ஆஹே

தஜீ தூளணு தூளிதா ஹீ ந ஸாஹே

(தா-ம்) ஓ தாமஸ மனமே! மாச்சரியத்தைவிட்டு நாமஸ்மரணை விடாதுசெய். நிற்க நாமஸங்கீர்த்தனம் நடக்குமிடத்தில் சிறத்தையோடு கவனித்து அங்கு மிங்கும் பேசாதிரு. காரணமென்னவெனில் அது எல்லா ஸாதனங்களின் ஸாரம். அதற்கு சமமாக ஒன்றையும் சொல்வது அசாத்தியம். மேலும் அதை ஒருவாறு வர்ணிக்கவுமுடியாது. ஆனால் அதின் ருசியும், ஆனந்தமும் ஸாது ஜனங்களுக்குத்தான் தெரியும்.

BH
82 பஹூ நாம யா ராமநாமீ துளேனா
BH G
அபாக்யா நரா பாமரா ஹே களேனா
DH G
விஷா ஔஷத கேதலே பார்வதீஸே
ஜியா மானவா கிங்கரா கோண பூஸே.

(தா-ம்) ஓ ராஜஸ மனமே! லோகத்தில் எல்லா நாமங்களிலும் ஸ்ரீராம நாமத்திற்கு சமத்வமொன்றுமில்லை. மந்தபுத்தியுடையவர்கள் இதன் பெருமையை அறியார்கள். அக்காலத்தில் சமுத்திரத்தை மந்திரகிரியால் கடையும்போதுண்டான ஆலகால்விஷத்தை ஸ்ரீ சங்கரன் சாப்பிட்டு அதனாலுண்டான கொடிய உபாதியை இம் மகத்தான தாரகமென்னும் ஔஷதமே சுகப்படுத்தினது. இதை யுணர்ந்த ஸ்ரீ சங்கரனுக்கே தெரியுமன்றி சாதாரண மனிதர்களுக்கு அம்மஹிமை அறிவது அசாத்தியம். ஆகையால் இந்நாமத்தை சகல ஜனங்களுக்கும் மிக்க ஆதாரமாகவும், பிறவித் துன்பத்தை வேரோடறுக்கும் மருந்தாகவும் கைக்கொண்டால் சகலவித கஷ்டங்களினின்றும் விலகி முக்திக்கு பாத்திரர்களாவார்களென்பது நிச்சயமாய் நினை.

DH
83 ஜெணெ ஜாளிலா காம தோ ராம த்யாதோ
DH G G
உமேஸீ அதி ஆதரே கூண காதோ
BH G
பஹூ ஞான வைராக்ய ஸாமர்த்ய ஜேதே
பரீ அந்தரீ நாமவிஸ்வாஸ தேதே.

(தா-ம்) ஓ ஸாத்வீக மனமே! ஸ்ரீ சங்கரன் காமனை எதனாலெரித்தானென்றால் ஸ்ரீராமதாரகத்தின் சக்தியால்தான். இம் மஹிமை தெரிந்தே ஸ்ரீ சங்கரனும் உமாதேவியும் எப்பொழுதும் அந்நாமத்தையே பக்தியுடன் தியானித்தும் அதின் பெருமைவாய்ந்த சக்தியை கீர்த்தனங்களாகப் பாடிக்கொண்டு மிருக்கிறார்கள். திரு

மூர்த்திக்குள் ஒருவரே அப்படி அனுஷ்டிக்கின் சாதாரணமான மனி தர்கள் பக்தி விஸ்வாஸத்துடன் ஏன் கையாளக்கூடாது. எப்பொழு தும் பஜிக்கவேண்டுமென்பது கருத்து. இதற்கு சாக்ஷியாக

“ ராம ராமேதி ராமேதி ரமே ராமே மனோரமே
G
ஸகஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வரானனே ”

ஸ்ரீ சங்கரன் உமாதேவியை ஒரு சமயம் ஆகாரமெடுக்க கூப் பிட்டபொழுது அவ்வம்மையார் நான் விஷ்ணு சகஸ்ரநாமம்செய்து வருகிறேனென்று சொன்னபொழுது ஸ்ரீ சங்கரன் இவ்வாயிர நாமங்களின் ரஸம் ஸ்ரீராம நாமத்திலிருக்கும்போது. ரஸத்தை ருசிக்காது மற்றவை ருசித்தால் என்ன சுகமிருக்கிறதெனவே உமா தேவியும் அதைப்பற்றியே அந்நாமத்தை பக்திசிரத்தையுடன்செய்ய வாரம்பிததார்கள்.

இதனால் தெரிவது யாதெனில் உமாதேவியே இந்நாமத்தை அனுஷ்டித்தாளெனில் மனிதர்கள் எத்தகைய சிரத்தை இத்தாரகத் தில் வைக்கவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ.

DH
84. விடோனே சிரீ வாஹிலா தேவராணு
DH
தயா அந்தரீ த்யாஸரே த்யாவிநேணு
நிவாலா ஸ்வயே தாபவீ சந்த்ரமௌளீ
D
ஜிவா லோடவீ ராம ஹா அந்தகாளீ.

(தா-ம்) ஓ மனமே! அந்த நாமஸ்மரணைக்கு மூலாதாரமான ஸ்ரீ விட்டல்பிரபுவை ஸ்ரீ சங்கரன் சிரசில் வைத்துக்கொள்ளவில் லையா. மேலும் அந்த நாமத்தை ஏகசித்தத்துடன் அனுஷ்டித்ததின் காரண மென்னவெனில் தான் விஷமுண்ட தாபத்தை சாந்தம் செய்ததினால்தான். ஆகையால் பகவத் கிருபையால் கிடைத்த இம் மானிட ஜன்மத்தை பக்தியிலீடுபடச்செய்து ஒரு நிமிஷமும் வீண் வாதத்தில் புத்தியைச் செலுத்தாது நாமஸ்மரணைசெய்து முக்திக்கு வழிதேடு.

BH G

85 பஜா ராம விஸ்ராம யோகேஸ்வரான்சா

G

ஜபூ நேமிலா நேம கௌரீ ஹரான்சா

DH

ஸ்வயே நீவவீ தாமவீ சந்தரமௌளீ

D

தும்ஹா ஸோடவீ ராம ஹா அந்தகாளீ.

(தா-ம்) ஓ மனமே! யோகீஸ்வரர்கள் மிக்க கஷ்டப்பட்டு கடைசியாக விஸ்ராந்தி கொடுக்கும் இந்நாமத்தைக் கடைப்பிடித்தார்கள். ஆகையால் மிக்க சிரேஷ்டமான இந்நாமத்தையே பஜனைசெய். மஹேசனும் இந்நாமத்தையே எப்பொழுதும் தியானம் செய்ததால் சாந்தி கிடைத்தது. இதைக் காரணமாகக்கொண்டு நீயும் அல்லும் பகலும் அந்த நாமத்தை ஆடிக்கொண்டும், வாயினுல் பாடிக்கொண்டும் மனதினுல் அந்நாமகாரண பூதமான ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை சிந்தித்திருக்கின் மஹாசிரேஷ்டமான பதவி கிடைக்கும்.

86 முகீ ராம விஸ்ராம தேதேன்சி ஆஹே

DH DH DH

ஸதானந்த ஆனந்த ஸேவூனி ராஹே

DH

தயாவீண தோ சீண ஸந்தேஹகாரீ

DH

நிஜதாம ஹே நாம சோகாபஹாரீ.

(தா-ம்) ஓ மனமே! எவன் ஸ்ரீராமஸ்மரணையின்றி வேறு சாதனங்களைக் கைக்கொள்வானே அவனதுவாழ்நாள் வீணே தவிர ஜென்மசாபல்யம் கிடைத்திடாது. ஆகையால் எல்லாவற்றையும் ஒருங்கேதள்ளி பலனைக் கருதாது அகண்ட நாமஸ்மரணை செய்தால் துக்க நிவாரணமாகி அளியாசுகத்தைக்கொடுத்து அவனது குடும்பத்தையும் சுகப்பிராப்தி யடையும்படி கருணை ஸ்ரீ ராகவன் செய்வார்.

BH DH CH
87 முகீ ராம த்யா காம பாதூ சகேனு
G DH
குணே இஷ்ட தாரிஷ்ட த்யான்சே சுகேனு
BH CH
ஹரி பக்த தோ சக்த காமாஸ மாரீ
G DH
ஜகீ தன்ய தோ மாருதி ப்ரஹ்மசாரீ.

(தா-ம்) ஓ மனமே! மேற்கண்ட அகண்ட நாமஸ்மரணை செய்துக்கொண்டு அதிலே லயித்திருக்கிறவனுக்கு பிரபஞ்ச தத்துவங்கள் அவனிடமிருந்து பறந்தோடிப்போம். ஸ்ரீ ராகவனது குண சங்கீர்த்தனங்களை பாடியாடிக்கொண்டிருப்பவனிடம் தாரித்திரிய முதலிய சங்கடங்கள் வரின் பொருட்செயயமாட்டான். ஹரிபக்தியில் ஆழ்ந்த்வனிடம் காமக்குரோத முதலியன அணுகாது. இப்படிக்கு ஈடுபட்டவர் மாருதியே. இவர் அஷ்டாங்க யோகங்கள் செய்யாது ஸ்ரீராம பக்தியில் எவ்விதமாக லீனமானுரென்பதையும், அவருடைய தைரியமும், பராக்கிரமமும், ஸ்ரீராமாயணத்தில் பார்க்கலாம். எல்லாம் தாரக நாமத்தின் மஹிமையே தவிர மற்றென்றில்லை.

BH G G
88 பஹு சாங்கலே நாம யா ராகவாசே
அதீ ஸாஜிரே ஸ்வல்ப ஸோபே புகாசே
G BH
கரீ மூள நிர்மூல சேதா பவாசே
ஜிவா மாணவா ஹேஸி கைவல்ய ஸாசே.

(தா-ம்) ஓ மனமே! ஸ்ரீ ராகவனுடைய "ராமா" வென்ற இரண்டு அக்ஷரமடங்கிய தாரகத்தின் மஹிமையால் சோகமணுகாது. அந்நாமம் எவ்வளவு சுலபமாயும், நினைத்தமாத்திரத்தில் எவ்வளவு எளிதில் அவனுடைய தரிசனம் கிடைக்கவும் காரணமாயிருக்கிறது. ஆகையால் இப்புனித நாமத்தை அதிப்பிரேமையோடு ஒருதடவை உச்சரித்தாலும் ஜனனமரணதிகளின் உபாதியிலிருந்து விடுபட்டு மோக்ஷப்பிராப்தி கிடைக்கும்.

BH DH
89 ஜனீ போஜனீ நாம வாசே வதாவே
DH G DH G
அதீ ஆதரே கத்ய கோஷே மஹ்றுவே
ஹரிசிந்தனே அன்ன ஜேவீத ஜாவே
BH
தரீ ஸ்ரீஹரி பாவிஜேதோ ஸ்வபாவே.

(தா-ம்) ஓ மனமே! போஜனத்திற்கு உட்காரும்போது ஸ்ரீ ராமநாமத்தை மிக்கபிரேமையோடு உறக்கச்சொல்லி பின்னர்புசிக்கவும். எப்பொழுதும் "பகவன்" நாமத்தைவிடாது ஸ்மரித்துக்கொண்டிருக்கும்படியான யோக சாதனமே ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் தரிசனத்திற்கு காரணமாகும். இந்த யோகத்தை ஸாது ஸந்த ஜனக்கூட்டத்தில் பார்க்கலாம். ஊக்கமும் பிரேமையும் அந்நாமத்திலிருக்கின் அதற்கு காரண பூதமானபொருள் எவ்வளவு எளிதில் கிடைக்கிறது. இதை நீ நன்றாய் கவனித்துப்பார்.

90 நயே ராம வாணீ தயா தோர ஹாணீ
ஜனீ வ்யர்த்த ப்ராணீ ஜயா நாம காணீ
DH CH
ஹரிநாம ஹே வேதசாஸ்ரே புராணீ
BH G BH
பஹு ஆகளே போலிலீ வ்யாஸவாணீ.

(தா-ம்) ஓ மனமே! எவன் தன் வாக்கினால் ஸ்ரீராம நாமத்தை உச்சரிக்கமாட்டானோ அவன் ஆத்மஹத்தி தோஷத்திற்கு ஆளாகிறான். மேலும் அவனுக்கு இம் மஹத்தான நாமம் துச்சமென்றே தோன்றும். அவனது வாழ்நாள் வீணாகி மிக்க கஷ்டங்களுக்கு ஈடுபட்டு துக்கத்தையே அனுபவித்து மறுபிறப்பிர்க்கு காரணமாகிறான். இன் நாமத்தைப்பற்றி வியாஸபகவான் செய்த புராணங்களில் மிக்க விரிவாயும் விமரிசையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

G
91 நகோ வீட மானூ ரகூநாயகாசா
DH BH
அதி ஆதரே போலிஜே ராமவாசா
D
ந வேன்சே முகி ஸாம்படே ரே புகுசா
G BH
கரீ கோஷ த்யா ஜானகீ வல்லபாசா.

(தா-ம்) ஓ மனமே! ஸ்ரீராம நாமத்தில் பிரியமில்லாது ஒரு போதுமிராதே. உன்னுடைய மூலாதாரத்தினின்று இம் மதுரமான நாமத்தைச்சொல். அதினால் உனக்கு யாதொரு சிரமமும் சிலவுமில்லை. நீ உண்மையாக பிறவித் துன்பத்தை அடையாதிருக்க ஸ்ரீராம நாமத்தை பரிசுத்தமான வாக்கினாலும் அந்தக் கரணசுத்தியோடும் கோஷிப்பாயாக.

DH G
92 அதீ ஆதரே ஸர்வஹீ நாம கோஷே
G DH DH DH
கிரீ கந்தரீ ஜாயிஜே தூர தோஷே
G
ஹரீ திஷ்டது தோஷலா நாமகோஷே
விசேஷே ஹரா மானஸீ ராமபீஸே.

(தா-ம்) ஓ மனமே! ஆதார பூர்வகமான ஸ்ரீராம நாமத்தை செய்வதினால் சகல தோஷங்களும் மலைக்குகைகளில் ஓடி ஒழிந்து கொள்ளுகிறது. மற்றும் அவைகள் நாசமாகின்றன. எவ்விடத்தில் பகவத் நாம கற்ஜனை கேட்கிறோமோ அவ்விடத்தில் பகவான் மூர்த்திகரமாகியும் மற்ற தேவர்களும் வந்தமருவார்கள். ஸ்ரீ சங்கரனும் அந்த நாமத்தில் முன்னர் சொல்லியது போல் மிக்க லக்ஷியத்தில் வைத்திருக்கிறார்.

G DH
93 ஜகீ பாஹதா தேவ ஹா அன்னதாதா
G
தயா லாகலீ தத்வதா ஸார சிந்தா
G
தயாசே முகீ நாம கேதா புகாசே
G
மனு ஸாங்க பா ரே தஜே காய வேசே.

(தா-ம்) ஓ மனமே! இந்த உலகில் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவ கோடிகளின் யோக க்ஷேமத்தைப்பற்றியும், அச்ஜீவர்களின் சுகதுக்கங்களை ஏற்றுக்கொண்டு காத்து ரக்ஷிக்கும்படியானவும் சர்வதேவர்களுக்கும் தேவனான ஸ்ரீ ராகவனது நாமத்தைச் சொல்வதில் ஒரு வித சிலவுமில்லை. மேலும் நீ தாயார் உந்தியிலிருக்கும்போது, பூமி ஸ்பரிசம்பட்டதும், மற்ற சிசு, பால, யௌவன, விருத்தாப்பியத்தில் உன்னை காத்து ரக்ஷிக்கிற ஸ்ரீராகவனது நாமத்தைச்சொல்ல என்ன கஷ்டமோ. இக்கைமாராவது அவருக்குச் செய்யக்கூடாதா.

CH
94 தின்ஹீ லோக ஜாளு சகே கோப யேதா
G
நிவாலா ஹரு தோ முகே நாம கேதா
DH CH
ஜபே ஆதரே பார்வதீ விஸ்வமாதா
மஹாஞ்ஞானீ மஹ்ஞு தேன்சி ஹோ நாம ஆதா.

(தா-ம்) ஓ குரோத மனமே! மிக்க கோபாவேசத்தினால் திருபுவனத்தையுமெறித்த சகல வல்லவனான ஸ்ரீ சங்கரன் தனது தாபத்தை சிரேஷ்டமான அத்தாரகாமிருதத்தால் எப்படி சாந்தி செய்துகொண்டார். மேலும் ஜெகஜ்ஜனனியான பார்வதி தேவியுங்கூட இத்தாரகத்தை ஒரு க்ஷணமும் ஸ்மரிக்காதிருக்கமாட்டார்கள். தேவியே அப்படிக்கு கையாள்வதென்றால் உனக்கு என்ன சொல்லவேண்டும், ஆகையால் நீயும் அந்நாமத்தையே முறையே செய்.

DH
95 அஜாமேள பாபீ வதே புத்ரகாமே
தயா முக்தி நாராயணசேணி நாமே
CH
சுகாகாரணே குண்டணீ ராமவாணீ
BH
முகே போலதா க்யாதி ஜாலீ புராணீ.

(தா-ம்) ஓ அன்புவாய்ந்த மனமே! அஜாமேளன் தன் பிராணன் போகுந் தருவாயில் தனது புத்திரனை நாராயணா நாராயணா வென்று எப்பிரேமையோடு கூப்பிட்டாலும் அது பகவன் நாமமாயிருந்தபடியால் அவனுக்கு முக்தி பிராப்தமாயிற்று. மற்றொரு திருஷ்டாந்தம். ஒரு தாசியானவள் தன்னிடமிருந்த கிளிக்கு விட்டலா விட்டலா என்றுசொல்லி பழக்கிவைத்ததால் அவ்வேசிக்கு மோக்ஷம் கிடைத்ததைப்பற்றி புராணங்களில் காணலாம். எவ்வித விருத்தியுடன் பகவன் நாமத்தைச் சொன்னாலும் அவனது கிருபைக்கு ஆளாகலாமென்பது கருத்து.

BH DH DH
96 மஹாபக்த ப்ரல்ஹாத ஹா தைத்யகூளீ
ஜபே ராமநாமாவளீ நித்ய காளீ
DH
பிதா பாபரூபி தயா தேகவேணு
DH
ஜனீ தைத்ய தோ நாம மூகே மஹ்ணேனு.

(தா - ம்) ஓ பொருமை மனமே! ராக்ஷஸகுலத்தில் பிறந்த பிரக்லாதன் அஸுரகுணமின்றி ஸ்ரீ ஹரிபக்தியிலீடுபட்டு ஸ்ரீ ராம கிருஷ்ண நாமத்தையே செய்துகொண்டிருந்ததால் அனேக கஷ்டங்களும் நீங்கி பரமபதத்திற்கு பிராப்தியானான். தன் தகப்பனான ஹிரண்யகசுபு மஹாபாபியாகவும், சண்டாளனாகவும் அசுரகுணத்திலே யாழ்ந்திருந்தான். இவன் ஒரு காலத்தும் பகவன் நாமத்தை சொன்னவனேயல்ல.

ஹிரண்யகசுபு தபஸிர்க்கு போனபொழுது தேவர்கள் சூழ்ச்சி யால் இந்திரன் கர்ப்பவதியாயிருந்த காயாதுவை எடுத்துக்கொண்டு போகும் வழியில் நாரதர் அறிவுற்று அவ்வம்மையை பாகீரதி தீரத்தி லிருக்கும் ஆசிரமத்தில்வைத்து அக்கர்பிணிக்கு உபதேசம் செய்தார். கர்ப்பத்திலிருந்த குழந்தையும் அவ்வுபதேசத்திற்கு ஈடுபட்டபடி யால் குழந்தை பேசுங்காலத்தில் முதலில் ராமகிருஷ்ண நாமத்தை சொல்ல ஆரம்பித்ததின் காரணம்.

97 முகீ நாம நாஹி தயா முக்தி கைஞ்சீ
G
அஹந்தாகுணே யாதணு தே புகாசீ
D DH
படே அந்த யேயீல தோ தைன்யவாணு
DH
மஹ்ணேனீ மஹ்ணு ரே மஹ்ணு தேவராணு.

(தா-ம்) ஓ மனமே! எவன் நாவினின்று ஸ்ரீ ராமநாமத் தைக்சொல்லாது பிரபஞ்சமாயைக்கு கட்டுப்படுகிறானோ அவனுக்கு எக்காலமும் மோக்ஷம் கிடையாது. அகங்காரத்தால் போகத்திற்கு உட்பட்டு கடைசியாக துக்கத்தைத்தரும் காலன் பாசத்தில் கட் டுண்டு கஷ்டத்தை அனுபவிக்கிறான். ஆகையால் இவைகளில் புத்தி செலுத்தாது எப்பொழுதும் ஸ்ரீராமநாமத்தையே செய்யின் சுகப் பிராப்தி கிடைக்குமென்பதில் சந்தேகமே யில்லை.

98 ஹரிநாம நேமஸ்த பாஷாண தாரீ
BH DH DH
பஹு தாரிலே மானவ தேஹ்தாரீ
DH
தயா ராமநாமீ ஸதா ஜோ விகல்பீ
DH DH
வதேணு கதா ஜீவ தோ பாபரூபீ.

(தா-ம்) ஓ மனமே! ஹரிநாமத்தின் மஹிமையால் கல்லும் கரையும், அநேக பக்தர்கள் இந்நாமத்தால் மிக்க மஹிமையடைந்து துல்யர்களானார்கள். இந்த ரகசியத்தை அறியாத மானிடர்கள் அநேக கஷ்டங்களுக்கு ஈடுபட்டு பாபத்தை அஞ்ஞானத்தால் சுமக் கிறார்கள். இதை நீ நன்றாய் அறிவாயாக.

G DH CH
99 ஜகீ தன்ய வாராணவஸி புண்யராசீ
G
தயேமாஜி ஜாதா கதீ பூர்வஜாவஸீ
முகே ராமநாமாவளீ நித்ய காளீ
G DH DH
ஜிவா ஹீத ஸாங்கே ஸதா சந்த்ரமௌளீ.

(தா-ம்) ஓ மனமே! இவ்வுலகில் மிக்க புண்யக்ஷேத்திரம் காசிமாநகர். பாபங்களை நிவர்த்திசெய்து ஸ்வர்க்கப்பிராப்தி கொடுக்கும்படியானவிடம். அங்குபோவதினால் உண்மையில் யாதொன்றும் பிராப்தமாகிறதில்லை. ஆகையா லிருக்குமிடத்திலேயே சிரமமின்றி பிரேமையுடன் மட்டில் நாமஸ்மரணம் செய்யின் சுகப்பிராப்தியும், ஸ்வர்க்கப்பதவியும் அடையலாம். இக் கொள்கையை அனுபவத்தில் அறிந்த ஸ்ரீசங்கரர் சகலபிராணிகளும் உஜ்ஜீவிக்கும்பொருட்டு இவ் விஷயத்தை மிக்க விரிவாக சொல்லியிருக்கிறார். இதை அத்தியாத்ம ராமாயணத்தில் காணலாம்.

G DH G D
100 யதாஸாங்க ரே கர்ம தேஹீ கடேஞ
G D G D
கடே கர்ம தே புண்ய காண்டீ புடேஞ
DH BH
தயா பாஹதா ஸர்வ பூதி அஸேஞ
புகாசே முகீ நாம தேஹீ வஸேஞ.

(தா-ம்) ஓ மனமே! சாஸ்திரானுசாரமான கர்மங்கள் நடப்பதில்லை. ஒருசமயம் புண்ணியத்தையடையலாமென்று பிரையத்தனப்படின் அதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டு காரியத்தை கெடுத்துவிடும். சகல பூதங்களிடத்தும் தயை உண்டாவது மிக்ககஷ்டம். இவைகளுக்கெல்லாம் சிரேஷ்டமான ஸ்ரீராம நாமத்தினுடைய பிராப்தி கிடைத்தால்போதும். இதைத்தவிர மேலானது யாதொன்றும் கிடைத்திடாது.

4

101. ஜயா நாவடே நாம த்யா யம ஜாசி
விகல்பே உடே தற்க த்யா நற்க சீ சீ
மஹ்ரேணீ அதீ ஆதரே நாம த்யாவே
முகே போலதா தோஷ ஜாதீ ஸ்வபாவே.

(தா-ம்) ஓ மனமே! ஸ்ரீராமநாமத்தில் விஸ்வாஸமும் அதை சொல்லுவதிலும் கேட்பதிலும் சிரத்தையில்லையோ அவன் காலனால் துக்கமுதலிய கஷ்டங்களை அனுபவிப்பான். ஆகையால் மேற்கண்ட உபாதிகளுக்கு கட்டுப்படாது ஸ்ரீராமநாமத்தை மிக்க பிரேமையோடு செய். அப்படிச் செய்யச் செய்ய எல்லா பாபங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி சுகப்பிராப்திக்கு ஆளாகலாம்.

102. அதீ லீனதா ஸர்வ பாவே ஸ்வபாவே
ஜனு ஸஜ்ஜனுலாகி ஸந்தோஷவாவே
தேஹே காரணீ ஸர்வ லாவீத ஜாவே
ஸகுணீ அதி ஆதரேவி பஜாவே.

(தா-ம்) ஓ மனமே! இவ்வுலகில் ஒவ்வொருவரும் நற்குணங்களை வகித்து ஸாதுக்கள் மற்றெல்லா ஜனங்களுக்கும் பிரேமையுண்டாகும்படி நடந்து கொள்ளவேண்டும். பிறருக்கு தன்னாலான வரையில் சரீர உதவிசெய்யவேண்டும். மேலும் சிரவணம், மனனம் இத்யாதி பிரவர்த்தியுடன் ஸ்ரீ ராகவனது குணாதிசயங்களைப்பற்றி பஜனைசெய்து சகுணோபாஸனையில் ஈடுபட்ட ஞானிகள் ஆனந்தத்திலிருந்தார்களென்றால் சாதாரண மனிதர்களைப்பற்றியும் சொல்லவேண்டுமோ.

இதுவரையில் ஸ்ரீராமநாம ஸ்மரணையைப்பற்றி உதாரணங்களோடுசொல்லப்பட்டது.

DH
103 ஹரீகீர்த்தனீ ப்ரீதி ராமீ தராவீ
DH BH DH
தேஹேபுத்தீ நீரூபணீ வீஸராவீ
DH
பரத்ரவ்ய ஆணீக காந்தா .ராவீ
DH D
யதர்தி மனு ஸாண்டி ஜீவீ கராவீ.

(தா-ம்) ஓ மந்த மனமே! சரீர சுகத்தை மறந்து ஸ்ரீராம நாமத்தை பக்தி சிரத்தையுடன் ஸ்மரித்துக்கொண்டிரு. மேலும், பிறர் பொருளிலும், கீர்த்தனம் செய்து பொருள் சேகரிக்காமலும், ஸ்திரீகளைப்பற்றி போற்றாமலும், அவர்கள்மீது துராசைவைக்காது தாய் சகோதரி பாவனையுடன் பழகல் வேண்டும்.

BH
104 க்ரியேவீண நானுபரீ போலிஜேதே
DH
பரி சித்த துஸ்சித்த தே லாஜவீதே
DH DH
மனு கல்பனு தீட ஸௌராட தாம்வே
DH
தயா மானவா தேவ கைஸேனி பாவே.

(தா-ம்) ஓ ஸாமர்த்திய மனமே! ஜனங்கள் அநேகமாக பிரஹ்மஞானத்தைப்பற்றி ஸம்ஸ்கிருத பாஷையிலும் மற்ற பாஷைகளிலும் எழுதியிருப்பதை பாராயணம் செய்துகொண்டு தன்னை பிரம்ம ஞானியென்றும், மிக்க பெரிய ஸாதுவென்றும் சொல்லும்படிக்கு நடை, உடை பாவனையால் பாசாங்கு செய்வார்கள். ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்தாலோநேர் விரோதமாகவிருக்கும். இற்க விஷய பிரவர்த்தியில் மிக்க ஈடுபட்டவர்களாயிருக்கின் பகவத்கிருபைக்கு எப்படி பாத்திரர்களாவார்கள்? ஒருபொழுதுமில்லை யென்பது கருத்து.

105 விவேகே க்ரியா ஆபுலீ பாலடாவா
DH DH DH
அதி ஆதரே சுத்த க்ரியா தராவா
BH BH
ஜனீ போலண்யா ஸாரகே சால பாபா
D
மணு கல்பணு ஸோடி ஸம்ஸார தாபா.

(தா - ம்) ஓ மனமே! விவேக புத்தியுடன் அசத்தியத்தை அப்புறப்படுத்தி சுத்த ஆசரணையிலிரு. நிற்க வேத ஆகமங்களில் சொல்லியவாறு நடக்க பிரயத்தனப்படு. அதாவது பேசுவதுபோல் நடத்தையுமிருக்கவேண்டும். அப்படிக்கின்றி சொல்வதொன்றும் ஒழுக்கமொன்றுமாக விருப்பது அழகல்ல. மேலும் கோரமயமான ஸம்ஸாரத்தில் தாமரையிலையில் தண்ணீர்போல்பட்டதும் படாதது மாக விருந்து நிற்சிந்தையுடனிரு.

BH DH
106 பரீ ஸ்ஞன ஸந்த்யா கரீ ஏகநிஷ்டா
BH
விவேகே மணு ஆவரீ ஸ்தானப்ரஷ்டா
DH BH
தயா ஸர்வபூதீ ஜயா மானவாலா
DH BH BH
ஸதா ப்ரேமளு பக்திபாவே நிமாலா.

(தா - ம்) ஓ ஆசார மனமே! பிரதி காலையில் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களும், மத்தியானம், சாயங்காலங்களிலும் தப்பற நியமித்தபடிசெய்து வரவும். நீ சஞ்சலமின்றி மிக்க விவேகத்துடன் ஆத்ம ஸ்வரூபத்திலிருக்க பிரையத்தனம் செய். சகல பூதங்களிடத்தும் மிகக பிரேமையோடு பிரவர்த்திசெய்துக்கொள்ளுகிறார்களோ அவர்களுககு சாந்தி அவசியம் கிடைக்கும்.

107 மணு கோபஆரோபணு தே நஸாவீ
BH G
மணு புத்தி ஹே ஸாதுஸங்கி வஸாவீ
G G
மணு நஷ்ட சாண்டாள தோ ஸங்க த்யாகீ
BH G BH G
மணு ஹோயி ரே மோக்ஷபாகி விபாகீ.

(தா - ம்) ஒ மனமே! மிக்க துச்சமான குரோதத்திற்கு கிஞ்சித்துமிடங்கொடாதே. எப்பொழுதும் நிர்மல புத்தியுடன் ஸத்ஸங்கத்திலேயிருந்து பழகப்பழக நல்வழிக்கு தானகவே உன்னை திருப்பும் சுலபமான ஸாதனம். சங்கட்டங்களுக்கும் சஞ்சலத்திற்கும் காரணம் துஷ்ட சாவகாசமே, எப்படியெனில் பெருங்காயத்தோடு பரிமள பச்சைக் கர்பூரத்தை சேர்த்தால் எல்லாம் பெருங்காய வாசனையே கொடுக்குமின்றி கர்பூரவாசனை கிட்டாது. இதற்கிணங்க துஷ்டர்களோடு சேரின் நீயும் துஷ்டனுகி பாப காரியங்களுக்கு உள்ளாவாய். ஆகையால் ஸாது ஜனங்களோடிருக்கின் அவர்களின் அமிர்த மொழிகளால் நல்லியனுகி மோக்ஷத்திற் கதிகாரியாவாய்.

DH G
108 மனு ஸர்வதா ஸஜ்ஜனுசேனி யோகே
BH BH G
க்ரியா பாலடே பக்திபாவார்த்த லாகே
க்ரியேவீண வாசாளதா தே நிவாரீ
DH DH
துடே வாத ஸம்வாத தோ ஹீதகாரீ.

(தா - ம்) ஒ மனமே! மேற் சொல்லியபடி எப்பொழுதும் ஸஜ்ஜனங்களோடிருக்க பிரையத்தனம் செய். அதனுல் உன்னுடைய கெட்ட பாவனைகள் வேருேடருந்து பக்திமார்க்கத்தில் கொண்டுவிடும். எவரும் வார்த்தைகளை பேசாது நீ பேசுகிறவரையில் நடத்திக் காண்பிக்கவும். சுகம்கொடுக்காத விதண்டவாதத்தில் ஈடுபடாது உனக்கிதமான ஸம்வாதத்தில் (மோக்ஷமார்க்கம்) வழிபடு.

DH DH DH
109 ஜனீ வாத வேவாத ஸோடுனி த்யாவா
DH
ஜனீ ஸுகஸம்வாத ஸுகே கராவா
CH
ஜனீ தோசி தோ சோகஸந்தாபஹாரீ
DH DH
துடே வாதஸம்வாத தோ ஹீதகாரீ.

(தா - ம்) ஓ மனமே! மேற்சொன்ன விதண்டவாதத்தை விட்டு எதின் மூலமாக சோக, மோக, போக தாபங்களை துலைக்க வேண்டுமோ அப்படிச்செய்து உனக்கும் மற்ற இதர ஜனங்களுக்கும் சாந்தி கிடைக்கும் உபாயங்களைத்தேடி சுகப்பிராப்திகிடைக்கும் போதனைகளை செய்வாயாக.

DH DH
110 துடே வாத ஸம்வாத த்யாதே மஹ்ணுவே
BH
விவேகே அஹம்பாவ யாதே ஜிஞுவே
G DH
அஹந்தாகுணே வாத நாஞ விகாரீ
DH DH
துடே வாத ஸம்வாத தோ ஹீதகாரீ.

(தா - ம்) ஓ மனமே! எவ்வாதத்தினுல் தத்வார்த்தம் விழங்குமோ அதைத்தான் உண்மையான ஸம்வாதமென்று சொல்ல வேண்டும். தான் எல்லாம் தெரிந்தவனென்று அகங்காரத்தோடு வாதம் செய்பவன் மதமாச்சரியங்களுக்கு உள்படுகிறுன். அப்படிப் பட்ட வாதத்தை காதவழிக்கப்புறம் தள்ளிவிடவேண்டும். ஸாது ஜனங்கள் வாதமே செய்ய மாட்டார்கள். ஆகையால் ஹிதத்தைக் கொடுத்து சுகப்பிராப்திக்கு ஈடுபடும்படி சொல்லும் உபதேசங்களில் புத்தியைச் செலுத்து.

BH
111 ஹிதாகாரணே போலணே ஸத்ய ஆஹே
DH
ஹிதாகாரணே ஸர்வ சோதூனீ பாஹே
BH D D
ஹிதாகாரணே பண்ட பாகாண்ட வாரீ
DH DH
துடே வாத ஸம்வாத தோ ஹீதகாரீ.

(தா - ம்) ஓ மனமே! நீ நல்வழியடைய கருதினதினுல் இந்த ஹிதவசனங்களை போதிக்கலாயிற்று. இவ்விஷயங்களை மறுபடியும் ஆலோசனை செய். வியர்த்தமான வாத விவாதங்களை ஒருங்கே தள்ளிவிட்டு சுகத்தைக்கொடுக்கும் வழியைப்பற்று. விதண்டவாதத்தில் ஒரு நிமிஷமும் புத்தியைச் செலுத்தாதே.

G
112 ஜனீ ஸாங்கதா ஐக்கதா ஜன்ம கேலா
DH DH
பரீ வாத விவாத தைஸாசி டேலா
DH DH BH
உடே ஸம்சயோ வாத ஹா தம்பதாரீ
DH DH
துடே வாத ஸம்வாத தோ ஹீதகாரீ.

(தா - ம்) ஓ மனமே! இவ்வுலகிலின்றுவரையில் நற்போத னைச் செய்தவர்களும், சிரவண, மனனமுதலீரானவைகளில் தேர்ந் தவர்களுமான அனேக ஸாதுக்கள் அவதரித்து அமிர்த மொழிகளை பிரசுரம் செய்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் விதண்டவாதம் செய்பவர்கள் இக்காலத்திலு மிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய மனத்தை நிற்மலமாகவும் சாந்தமாகும்படி செய்யாது சந்தேக மென்ற காடாந்தக இருளில் விழவைப்பது விதண்டவாதமேயாகும். எத்தத்துவங்களின் மூலமாக இகபரஸாதனங்கள் பரிமளிக்குமோ அப்பேர்ப்பட்ட ஸம்வாதந்தான் ஆனந்தத்தை விளைவிக்கும் பொரு ளென்று தெரிந்துகொள். பகவத் விஷயத்திலும் தர்மங்களைபற்றி யும் சமாதானம் கொடுக்க விதண்டவாதம் பிரையோசனமில்லை. அனுபவமில்லா வார்த்தைகள் அசத்தே. அப்பேர்க்கொத்த அனுப வம்ஸாதுக்களுக்கேஉண்டு அவர்கள் மொழிகளைக்கேட்பதால் சாந்தி கிடைத்து ஸமாதி நிலையும் கிட்டும். அனுபவமில்லா வியர்த்தமொழி கள் டம்பமேயாகும்.

D D G
113 ஜனீ ஹீத பண்டித ஸாண்டித கேலே
G
அஹந்தாகுணே ப்ரஹ்மராக்ஷஸ ஜாலே
தயாஹூனி வ்யுத்பன்ன தோ கோண ஆஹே
மனா ஸர்வ ஜாணீவ ஸாண்டூனி ராஹே.

(தா-ம்) ஓ மனமே! பெரிய பண்டிதர்கள் மேற்சொன்ன வாத விவாதங்களில் காலங்கழித்து சுகம் கிடைக்காது போய்ச்சேர்ந் தார்கள். அகங்காரத்தால் அச்சிரேஷ்ட பாண்டித்யமுடையவர் கள் பிரம்மராக்ஷஸர்களானார்கள். அவர்களில் வாமன பண்டிதர் ஒருவர். இவர் ஈஸ்வர பக்தியிலும் பூர்ண ஞானத்திலும் இவரை வெல்ல ஒருவருமில்லை. இதனால் தெரிவது யாதெனில் பகவானைத் தெரிந்துகொள்ளும் ஞானசக்தி யிருக்கினும் அதனால் உண்டாகும் அகங்காரத்தை அடியோடறு. எவன் தனக்கு ஆத்மஞானம் கிடைத் ததென்று பிதற்றுவானோ அவன் அஞ்ஞானியென்று தீர்மானிக்க லாம். இதைப்போல் எவனொருவன் முக்தனென்று பாசாங்கு செய்கிறானோ அவன் உலக பாசத்தில் கட்டுண்டவனேயாவான். காரணம் எல்லாவற்றிலும் சிரேஷ்டமான ஞாதா யாரெனில் பர மாத்மாவே யொழிய மற்றொன்றில்லை. ஆகையால் மேற்சொன்ன ஞானிகளும் முக்தர்களும் நாசத்திற்கே பிராப்தியாகிறார்கள். ஞானா பிமானங்களை விடாதவன் மஹா காதகனாவான்.

114 புகாசே முகி போலதா காய வேசே
திஸேதீஸ அப்யந்தரீ கர்வ ஸாசே
க்ரியேவீண வாசாளதா வ்யர்த ஆஹே
விசாரே துஜா தூன்சி சோதூன பாஹே.

(த-ம்) என் நேச மனமே! நிர்மலமாகவிருந்து உன் நாவி னால் பிரம்ம ஞான முண்டாவதற்கு மஹாவாக்கியங்களைச் சொன் னால் உனக்கு என்ன கஷ்டமும் சிலவுமிருக்கிறது. இதற்கு சாது ஜனங்களின் சவகாசந்தான் முக்கியம். இப்படிக்கு அனுஷ்டிக்காது நான் பிரம்ம ஞானியென்று வீணாக குதித்தலும்கூடாது. வீண்பேச் சில் நாளையோட்டிவிடாது காரியத்தில் கண்ணாகவும் மிக்க அடக்க மாகவு மிருக்கவேண்டும். ஆகையால் அஹங்கார மமகாரங்களை அடியோடு தள்ளி ஆத்ம விசாரம்செய்து அத்தகைய பிரம்ம ஞானத் தில் தீவிரமாக புத்தி செலுத்தவேண்டும்.

DH DH
115 துடே வாத ஸம்வாத தேதே கராவா
BH
விவேகே அஹம்பாவ ஹா பாலடாவா
BH
ஜனீ போலண்யா ஸாரிகே ஆசராவே
BH
க்ரியா பாலடே பக்திபந்தேசி ஜாவே.

(தா-ம்) ஓ மனமே! உனது விவேக சகாயத்தால் அஹம்பாவத்தை வேரோடறு. அவ்வகந்தை நசித்த பிறகு உன்னைப்போல் நிறஹங்காரிகளுக்கு ஸத்போதனைசெய்து ஆத்ம ஜீவனத்தில் காலத்தைக்கழி. இம்மார்க்கத்தை விடாது கைப்பிடிக்கின் பவித்திரனுவாய். தீவிர சித்தத்துடன் பக்திமார்க்கத்தை கடைப்பிடி.

இதுவரையில் வீண்பேச்சில் பொழுதுபோக்காது ஈஸ்வரனையடைய உத்தம வாதங்கள் செய்வது மிகவும் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது.

BH CH BH
116 பஹு சாபிதா கஷ்டலா அம்பருஷீ
CH
தயாசே ஸ்வயே ஸ்ரீஹரி ஜன்ம ஸோசீ
DH DH
திலா க்ஷீரஸிந்தூ தயா ஊபமானீ
DH DH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா-ம்) ஓ மனமே! துர்வாஸ மஹருஷியின் சாபத்தால் பீடிக்கப்பட்ட அம்பருஷியின் வியாகூலத்தைக்கண்டு ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இந்த ராஜருஷியின் சாபத்தைத் தீர்த்துஅவரைத் தன்னுந்தியில் வைத்துக்கொண்டார். நிற்க உபமன்யுவான குழந்தையை க்ஷீரஸாகரத்தில் வைத்தார். அப்பேர்ப்பட்ட பக்தவஸ்ஸலன் தன் தாஸர்களிடம் பாராமுகமா யிருக்கமாட்டார்.

DH BH D DH
117 த்ருவ லேங்கரு பாபுடே ஜைன்யவாணே
BH DH BH
க்ருபா பாகிதா தீதளீ பேடி ஜேணே

சிரஞ்ஜீவ தாராங்கணீ ப்ரோமகாணி
DH B BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானி.

(தா - ம்) ஒ மனமே! ஐந்துவயது குழந்தை துருவன் செய்த தபவின் மஹிமையால் பகவான் தரிசனம் கொடுத்து அப்பக்தனை மிக்க சிரேஷ்டமாகவும், அளியாப் பதவியான சிரஞ்சீவித்வமும் கொடுத்து ஆட்கொண்டார். ஆகையால் பக்த ஜனங்களின் வாச்சல்லியத்தால் பரமபத நிவாஸனுனஸ்ரீமந்நாராயணனுக்கு எப்பொழுதும் அவர்கள்மீது ஞாபகமிருந்துகொண்டேயிருக்கும். ஒருக்காலமும் மறவார்.

G DH
118 கஜேந்த்ரு மஹா ஸங்கடீ வாடபாஹே
DH
தயாகாரணே ஸ்ரீ ஹரி தாம்வதாஹே
D G DH
உடீ காதலீ ஜாஹளா ஜீவதானீ
DH DH B BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஒ மனமே! பகவானை நினைக்கும் எஜ்ஜீவியானாலும் அவருடைய தயாளத்வமும், வாஸ்ஸல்யமும், கருணையும் சொல்லவொண்ணுது. முதலைவாயில் அகப்பட்டு நெடுநாளாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் யானையை (கஜேந்திரன்) ரக்ஷிக்கத் தாவிவந்து அந்த யானைக்கு பிராணதானம் கொடுத்து காப்பாற்றினுர். தன்னை நினைக்கும் பக்தர்களை ஒருபொழுதும் நிராகரிக்கமாட்டார்.

119 அஜாமேள பாபி தயா அந்த ஆலா

க்ருபாளுபணே தோ ஜனீ முக்த கேலா

DH
அநாதாவஸி ஆதார ஹா சக்ரபாணி

DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ

(தா - ம்) ஓ மனமே! ஏர்க்கனவே 95-வது ஸ்லோகத்தில் சொல்லியடி அஜாமேளன் தான் மிக்க பாபியாயிருந்தும் பிராணன் போகுந் தருவாயில் புத்திரனை எக்காரணத்தைக்கொண்டு நாராயணு வென்று கூப்பிட்டவுடன் பகவான் அவனது சர்வபாபங்களையும் போக்கி விமுகதனுகச் செய்தார். அப்படிப்பட்ட அனுதர்களையும் காப்பாற்ற கல்பக விருக்ஷம்போல் சக்ரதாரியான பகவான் தனது பக்தர்களை ஒருபோதும் கைவிடமாட்டார்.

G
120 விதீகாரணே ஜாஹலா மத்ஸ்ய வேகீ

DH DH BH G
தரீ கூர்மரூபே தரா ப்ரஷ்டபாகீ

ஜனு ரக்ஷணு காரணே நீச யோனீ

DH DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! பிரம்மாவின் குரையைத் தீர்க்கும் பொருட்டு பக்தவஸ்ஸலனுன பகவான் மீன்ரூபியானூர். நிற்க சமுத்திரத்தைக் கடையும்போது ஆமை ரூபமாக மேருபர்வதத்தை முதுகில் சுமந்து தேவர்களின் காரியத்தை முடித்தார். பாமரர்களான ஜனங்களை ரக்ஷிப்பதற்கே கேவல ஜன்மங்கள் எடுத்தார். அப்பேர்கொத்த பக்தவஸ்ஸலனுன பகவான் எச்சமயத்திலும் பக்தர்களை காப்பாற்ருமலிருக்கமாட்டார்.

BH
121 மஹாபக்த ப்ரல்ஹாத ஹா கஷ்டவீலா
மஹ்றஞேனீ தயாகாரணே ஸிம்ஹ ஜாலா
DH
நயே ஜ்வாள வீசாள ஸந்நீத கோணீ
DH DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! சிறந்த பக்தனான பிரஹ்லாதனை தன் பிதாவான ஹிரண்யகசுபு தாளமாட்டாத கஷ்டங்களைக் கொடுத்த பொழுதும் பகவத்தியானத்திலிருந்து அவைகளை வகித்ததைக்கண்ட ஸ்ரீமந் நாராயணன் நரஸிம்மாவதாரமெடுத்து மூவுலகங்களும் நடுங்க, கண்களினின்று அக்னிஜ்வாலை பொரிபறக்க நின்றபொழுது பிரஹ்லாதன் சாந்தத்துடன் அப்பிரபுவை ஸ்துதிசெய்து நமஸ்கரித்து நின்றபொழுது அவனைத் தடுத்தாட்கொண்ட பக்தவாஸ்ஸல்யன் தனது பக்தர்களை ஒருபொழுதும் பாதுகாப்பாதிருக்கமாட்டார்.

BH
122 க்ருபா பாகிதா ஜாஹலா வஜ்ரபாணீ
தயாகாரணே வாமனூ சக்ரபாணீ
DH BH
த்விஜாகாரணே பார்கவூ சாபபாணீ
DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! மிக்க பராக்கிரமம் வாய்ந்த பலிசக்ரவர்த்தியால் தேவர்கள் கஷ்டப்படும்பொழுது இவர்களுக்கதிபதியான இந்திரன் ஏகாகிரசித்தத்துடன் பகவானைப் பிரார்த்திக்க இதையறிந்த பக்தபிரியன் அவர்களை ரக்ஷிக்க வாமன உருவம் கொண்டு பலிசக்ரவர்த்தியின் அஹங்காரத்தை அடக்கினர். அந்த ராக்ஷஸ பூண்டே யிராதபடி பரசுராமாவதாரமெடுத்து அழித்தார். இப்பேர்ப்பட்ட கருணாநிதியான பகவான் பக்தர்களை ஒருபொழுதும் மறவார்.

G
123 அசுல்யே ஸதீலாகி ஆரண்யபந்தே
D D BH
குடாவா புடே தேவ பந்தீ தயாந்தே
BH D G G
பளே ஸோடிதா காவ காலீ நிசாணீ
DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி சம்ரக்ஷணார்த்தம் ஆரண்ய மார்க்கமாக போகும் வழியில் சாபத்தால் பீடிக்கப் பட்டு கல்லாயிருந்த அகலிகையை தன் பொற்பாத கமலங்களின் மஹிமையால் சாபவிமோசனமாக்கி முக்தியடைவித்தார். மேலும் ராவணனால் சிறைப்பட்டிருந்த அனேக தேவர்களை மீட்டு காத்து ரக்ஷித்த ஸ்ரீ ராகவன் தன்னை வாஞ்சித்தவர்களிடம் எப்பொழுதும் ஜாக்கிரதையாய் அவர்கள் க்ஷேமத்தில் வெகு கண்ணா யிருப்பார்.

DH DH G G
124 தயே த்ரௌபதீகாரணே லாக வேகே
DH G
த்வரே தாம்வதோ ஸர்வ ஸாண்டுனி மாகே
G BH DH
களீலாகீ ஜாளா அஸே பௌத்ய மௌனீ
DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! பதிவிரதா சிரோன்மணியான திரௌபதியை மானபங்கம் செய்யும் தருவாயில் கடைசியில் பகவானை நினைத்து கைகூப்பி ஆபத்பாந்தவா என்ற சப்தத்தை கேட்ட கிருஷ்ணபரமாத்மா தனது காரியங்களைவிட்டு சமூகத்தில் வந்து அவளுடைய மானத்தை காத்து ரக்ஷித்தார். மேலும் இக்கலியில் யார் பௌத்தரூபமாக விருந்தாரோ அப்பேர்ப்பட்டவர் பக்தர்களை ஏன் காத்து ரக்ஷிக்கமாட்டார்?

DH
125 அனுதா திஞகாரணே ஜன்மதாஹே
D DH
கலங்கீ புடே தேவ ஹோணார ஆஹே
DH
ஜயா வர்ணிதா சிணலீ வேதவாணீ
DH BH BH
நுபேக்ஷி கதா தேவ பக்தாபிமானீ.

(தா - ம்) ஓ மனமே! அனுதியா யிருக்கப்பட்ட ஜனங்களை காப்பாற்ற அடிக்கடி பூமியில் தீனரக்ஷகனுன பகவான் அவதரிக்கிறார். இக்கலியில் பகவான் கல்கிரூபமா அவதரிப்பார். அவரை வர்ணிக்க ஆதிசேஷனுலும் வேதங்களினுலும் முடியாது ஒழிந்து கொண்டன. ஆகையால் அப்பேர்க்கொத்த அநாதனுகவும், கருணுநிதியாகவும், ஆபத்பாந்தவனுகவும், தீனதயாளனுகவும் இன்னும் மஹத்தான சாமர்த்தியங்கள் வாய்ந்த ஸ்ரீராகவன் பக்தர்களை காத்து ரக்ஷிக்காதிருக்கவேமாட்டார்.

120-ஸ்லோக முதல் 125-வரையிலுள்ள இவ்வாறு ஸ்லோகங்களில் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமி ஸ்ரீமன் நாராயணமூர்த்தியின் தசாவதாரங்களின் மகிமையைப்பற்றி விசேஷமாக வர்ணித்திருக்கிறார். கடைசி ஸ்லோகத்தில் (125) கல்கி அவதாரத்தில் பகவான் சம்பல கிராமத்தில் விஷ்ணுவென்ற பெயர் வகித்து மிக்க சிரேஷ்டமான ஒரு பிராமணர் வீட்டில் அவதரிப்பதாக ஸ்ரீ பாகவதத்தில் வரையப்பட்டிருக்கிறது.

126 ஜனுகாரணே தேவ லீலாவதாரீ
BH DH DH
பஹுதாம்பரீ ஆதரே வேஷதாரீ

தயா நேணதீ தே ஜன பாபரூபீ
DH
துராத்மே மஹா நஷ்ட சாண்டாளபாபீ.

(தா - ம்) ஓ மனமே! பக்த ஜனங்களின் ஸமரக்ஷணைப் பொருட்டே ஸ்ரீமந் நாராயணன் அனேக அவதாரங்களெடுத்து ஸங்

தர்ப்பங்களுக்கு தக்கவாறு எவ்வெவ்விதமாக ரக்ஷணார்த்தம் தோன்றி ஞரோ அப்படிப்பட்ட பகவானை யார் தெரிந்துகொள்ளவில்லையோ அப்பேர்ப்பட்டவர்கள் மஹா பாபிகளாகவும், துர்மார்க்கிகளாகவும், சண்டாளர்களாகவுமாகி மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாகி பகவத் கிருபை ஒருபோதும் கிடைக்காதென்று நிச்சயமாக தெரிந்துகொள் ளவும்.

127 ஜகீ தன்ய தோ ராமஸுகே நிவாலா
கதா ஐகதா ஸர்வ தல்லீன ஜாலா
தேஹேபாவனு ராமபோதே உடாலீ
மனோவாஸனு ராமரூபீ புடாலீ.

(தா - ம்) ஓ மனமே! எவனுக்கு ஸ்ரீ ராமதியான மூலமாக சுகப்பிராப்தி கிடைத்து, பாவத் குணானுபவங்களை சாவதானத் துடன் சிரவணம் செய்து அதிலே ஏகாக்கிரசித்தமடைந்தானோ அவனுக்கு ஜகமெல்லாம் ஸ்ரீ ராமமயமாகத் தோன்றும். இந்த பாவ னையில் திருஷ்டிகிடைத்த பிறகு தன் தேகாபிமானங்களெல்லாம் நாசமாகி அந்நாம ரூபத்தில் லீனமாகிறான். இப்பேர்ப்பட்டவர் களைத்தான் உலகில் தன்யர்களென்று நினை.

இதுபர்யந்தம் தன்னையடைய கோரினவர்களுக்குத் தானே தரிசனம் கொடுத்து ரக்ஷித்ததைப்பற்றி சொல்லப்பட்டது.

128 மனு வாஸனு வாஸுதேவீ வஸோன் தே
மனு காமனு காமஸங்கீ நஸோன் தே
மனு கல்பனு வாவுகீ தே ந கீஜே
மனு ஸஜ்ஜனு ஸஜ்ஜனீ வஸ்தி கீஜே.

(தா - ம்) ஒ மனமே! ஸ்ரீவாஸுதேவன்மேல் பிரேமையை காம முதலிய ஷட்வர்கங்களுக்கு உட்படாது எப்பொழுதும் ஆத்ம விசாரத்தோடிரு. அப்படிக்கிருக்கின் ஜகத் கல்பனையான மாயை உன்னைவிட்டகலும். ஸாது ஜனங்களின் சேர்க்கையில் லீனமாயிருந்தால் சாந்தம் கிடைத்து அவர்களின் கடாக்ஷத்தால் முக்தி கிடைக்கும்.

129 கதிகாரணே ஸங்கதி ஸஜ்ஜனுசி (G) (G)

மதி பாலடே ஸுமதி துர்ஜனுசீ (DH)

ரதிநாயகேசா பதிநஷ்ட ஆஹே

மஹ்ணோனீ மனுதீத ஹோவூனி ராஹே.

(தா - ம்) ஒ மனமே! தீவிரபுத்தியடைய வேண்டுமென்றால் ஸாது ஜன சாவகாசம் அவசியம் கிட்டவேண்டும், அதனால் உனக்கு சுகமும் உன்னோடு சேர்ந்த துர்ஜனங்களின் குணமமாறி நல்வழிப் படுவார்கள். காமமென்பது சகல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆதாரமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட காமத்தை ஸத்ஸங்கத்தால் தள்ளி நிற்விகாரப்பதவியிலீடுபட்டிரு.

130 மனு அல்ப ஸங்கல்ப தோஹீ நஸாவா

ஸதா ஸத்ய ஸங்கல்ப சித்தீ வஸாவா

ஜனீ ஜல்ப விகல்ப தோஹீ த்யஜாவா

ரமாகாந்த ஏகாந்த காளீ பஜாவா. (BH)

(தா - ம்) ஒ மனமே! சங்கல்ப விகல்பங்கள் உன் சுபாவமாயிருக்கிறது. ஆகையால் இவைகளை விட்டு ஸத்யமாகவும் ஞாயமாகவும் நடக்கும் வழியைத்தேடு. மூர்க்கரோடு சேருதல் காலத்தை வீணுக்குதலேயாகும். அதனால் அவர்களின் சினேகமின்றி ஏகாந்தத்திலிருந்து ஸ்ரீ ராம நாமத்தை தியானித்திரு. மனோ நிக்ரகம். சித்தவசதி இல்லாதவனுக்கு பகவானிடம் ஈடுபட முடியாது. சாஞ்சல்ய மனதை ஒரு வழியில் நிறுத்தி தத்வ விசாரம், தியானம் இவைகளிலீடுபட்டு பரமார்தீகமடைய எத்தனி.

BH
131 பஜாயா மனீ பாஹதா ராம ஏகூ
B CH BH
கரீ பாண ஏகூ முகி சப்த ஏகூ
DH DH
க்ரியா பாஹதா உத்தமே ஸர்வ லோகூ

தரா ஜானகீ நயகாசா விவேகூ.

(தா-ம்) ஓ மனமே! எல்லா மார்க்கங்களிலும் சிறந்தது ஸ்ரீ ராமநாமத்தியானம். ஏனெனில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஒரு பாணத்தோடும், ஒரு மனைவியோடும், இத்யாதி விஷயங்களை நன்றாக அனுபவத்தில் ஜனங்களுக்கு காட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட அந்த பகவானை ஞானமார்க்கத்தில் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் அவரது சரித்திரத்தை பிரதிதினம் மனனம் செய்து கொண்டிருக்கவும்.

B
132 விசாருனி போலே விவஞ்சூனி சாலே
CH
தயாசேனி ஸந்தப்த தேஹி நிவாலே
B CH
பரே சோதில்யாவீண போலோ நகோஹோ
CH DH
ஜனீ சாலணே சுத்த நேமஸ்த ராஹோ.

(தா-ம்) ஓ மனமே! நீ பேசுவதற்கு முன்னர் எதைப் பேசப்போகிறோமென்றுணர்ந்து பேசவேண்டும். மேலும் பரிசுத்த நடவடிக்கை உள்ளவரோடு கூடி அச்சினேகிதத்தால் முக்குணங்களின் தாபமடங்கி அவர்கள் மூலமாக நற்போதங்களும் அடையலாம். ஆகையால் மேற்சொன்னவைகளை சிரத்தையோடு கவனித்து நடந்துகொள்.

B
133 ஹரீபக்த வீரக்த விஞ்ஞானராஸீ
ஜேணே மானஸீ ஸ்த்யாபிலே நிச்சயாஸீ
DH D
தயா தர்சனே ஸ்பர்சனே புண்ய ஜோசடே
DH D
தயா பாஷணே நஷ்ட ஸந்தேஹ மோடே.

(தா-ம்) ஓ மனமே! பகவத் பக்தன், வைராக்கியசீலன், மிக்க அனுபவி, ஆத்மஸ்வரூபத்தில் லக்ஷியம், இத்தியாதி குணங்கள் வாய்ந்த, புண்ணிய புருஷனை தரிசித்து அவர்களுடைய நட்பே மிக்க சிரேஷ்டமானது. மேலும் அப்பேர்ப்பட்டவர்களிடத்தில் உப தேசம்பெற்று விருத்திய சம்சங்கள் அறுந்து ஆத்மலாபத்தை அடைவாய்.

G DH G
134 நஸே கர்வ ஆங்கீ ஸதா விதராகீ
CH B G DH DH G
க்ஷமா சாந்தி போகீ தயா தக்ஷ யோகீ
B B DH
நஸே லோப நா க்ஷோப நா தைன்யவாணு
G
இஹி லக்ஷணீ ஜாணிஜே யோகிராணு.

(தா - ம்) ஓ மனமே! கர்வமின்றியும், விரக்தனுகவும், சாந்த மும் க்ஷமை முதலிய குணங்களும், அந்தக்கரணசுத்தி, லோபமற்று இருப்பானே அவனுடைய காரியங்கள் எப்பொழுதும் சாந்தமாகவே யிருக்கும். மேலும் திடபுத்தியும் சாந்தமும் யாரிடத்திலிருக்குமோ அவனை மிக்கச் சிறந்த யோகியென்று தெரிந்துகொள்.

DH
135 தரீ ரே மனு ஸங்கதி ஸஜ்ஜனுசி
ஜெணே வ்ருத்தி ஹேற பாலடே துர்ஜனுசி
B B B DH G G
பளே பாவ ஸத்புத்தி ஸன்மார்க்க லாகே
B G
மஹா க்ரூர தோ காள விக்ராள பங்கே.

(தா - ம்) ஓ மனமே! ஸத்ஸங்கத்தால் துர்ஜனங்களின் குணங்கள் மாறுபட்டு நீதியான மார்க்கமே கடைப்பிடிப்பார்கள். மேற்சொன்ன வழியினுல் மஹா பயங்கரமான எமனையும் விலகி யிருக்கச்சொல்லலாம். ஸத்ஸங்கமே சர்வ விவகாரங்களுக்கும் மேலான உபகாரியாகும்.

இதுவரையில் ஸத்ஸங்கத்தால் ஸ்ரீ ராகவனது தரிசனம் கிடைக்குமென்பதைப்பற்றி சொல்லப்பட்டது.

B BH
136 பயே வ்யாபிலே ஸர்வ ப்ரஹ்மாண்ட ஆஹே
B DH
பயாதீத தே|ஸந்த ஆநந்த பாஹே
DH
ஜயா பாஹதா த்வைத காஹி திஸேஞ
B
பயா மானவீ ஸர்வதாஹீ அஸேஞ.

(தா - ம்) ஒ மனமே! இப் பிரம்மாண்டத்திலுள்ள அநேக ஜனங்கள் த்வைத மார்க்கத்திலிருக்கிறபடியால் அனேக கஷ்டங்களுக்கு உட்படுகிறார்கள். ஆனால் பிரம்மம்மாத்திரம் பயத்திலிருந்து அன்னியதாயிருக்கிறது. கார்ணம் யாதெனில் பிரம்மம் என்பது ஒன்றே. அதில் இருபாவமுண்டு பண்ணுவதற்கு ஞாயமே இல்லை. எவனுக்கு அப்பிரம்மத்தையடைய பிராப்தியுள்ளதோ அப்பேர்ப்பட்டவனுக்கு வேறு எவ்வித பயமும் தோன்றாது.

பயமென்பது மனோ விகாரத்திலொன்று. ஆத்ம ஞானம் எவனுக்கில்லையோ அவனிடம் இவ்விகாரம் தோன்றும். ஆத்மஞானமடைந்தவனுக்கு எங்கும் ஆத்மஸ்வரூபமே தெரியும். ஆகையால் பயமென்பது கிஞ்சித்துமிராது. மாயையில் கட்டுப்பட்டு ஸம்ஸாரத்திலுழலும் மனிதர்களுக்குமாத்திரம் பயம். சிந்தை சஞ்சலங்களுண்டு. ஏனெனில் அவர்களிடத்தில் அஞ்ஞானமும் அகங்கார மமகாரங்கள் குடிகொண்டிருப்பதால்தான். ஸத்புருஷர்களிடத்தில் பயமென்பது கிஞ்கித்தும்பார்க்க முடியாது. அவர்கள் வாசஞ் செய்யுமிடமட்டில் இதன் உண்மையை விழக்கும்.

G G
137 ஜிவா ஸ்ரேஷ்ட தே ஸ்பஷ்ட ஸாங்கோனி கேலே
பரீ ஜீவ அஞ்ஞான தைஸேசி டேலே
DH B DH
தேஹே புத்திசே கர்ம கோடே டளேஞ
ஜானே டேவணே மீபணே ஆகளேஞ.

(தா - ம்) ஓ மனமே! ஜடமூடர்களான ஜீவர்களுக்கு ஈஸ்வர பிராப்திகிட்டுவதற்கு அநேக ஸாது ஜனங்கள் இம்மூடர்களை உஜ்ஜீவிக்கும்பொருட்டு சுலப மார்க்கங்கள் போதித்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் எச்சீவர்கள் அஞ்ஞானத்திலேயே உழலுவார்களோ அவர்கள் எப்பொழுதும் அம்மயமாகவே யிருப்பார்கள். எந்த காலம் வரையில் இது எனது என்னுடையதென்று இருக்கிறதோ அது வரையில் அஞ்ஞானத்திலீடுபட்டு ஆத்மதத்துவம் கிடைத்திடாமல் கஷ்டமே அனுபவிக்கவேண்டும்.

BH D G B
138 ப்ரமே நாடலே வித்த தே குப்த ஜாலே
DH DH
ஜிவா ஜென்ம தாரித்ர டாகூனி ஆலே
DH B DH
தேஹே புத்திசா நிச்சயயோ ஜ்யா டளேனு
ஜானே டேவணே மீபணே ஆகளேனு.

(தா-ம்) ஓ மனமே! பூர்வத்தில் ரகசியமாக முன்னோர் புதைத்து வைத்த பொருளைத் தெரியாது எப்பொழுதும் அதே திருஷ்டியாயிருப்பவனுக்கு அப்பொருள் கிடைப்பதில்லை. இதனாலேயே தரித்திரனாகிறான். அதைப்போல் மூடஜனங்கள் தேஹாத்மபுத்தி விஷயத்தை தெரிந்து ஆத்மஸ்வரூபமே சிறந்த பொருளென்று நினைக்காவிடில் மோக்ஷம் கிடைத்திடாதென்று தீர்மானிக்கலாம்.

D DH
139 புடே பாஹதா ஸர்வஹி கோந்தலேஸே
B DH B
அபாக்யாஸ ஹேற த்ருச்ய பாஷாண பாஸே
B DH G D
அபாவே சதா புண்ய கான்டீ புடேனு
ஜானே டேவணே மீபணே ஆகளேனு.

(தா - ம்) ஓ மனமே! தேவன் ஸர்வ வியாபியென்ற ஆத்ம அறிவென்ற தனமிருக்க அப்புதையலே எடுக்க கடப்பாறையும், மண் வெட்டியும், ஆளும் தேவையில்லை. அப்பொருள் ஸர்வத்திலும் வியாபித்திருக்கிறது. மேலுமது அந்தர்யாமியாகவும் மூர்த்திகரத்துடன் திருஷ்டிக்கு புலப்படும். அப்பொருளில் லக்ஷியம் வைக்காதவர்களுக்கு கோசரமாகாமல் அவர்கள் ஆட்கொல்லியென்ற அகங்காரமென்னும் தத்துவத்தால் தொன்று தொட்டு விழங்கும் வஸ்துவிற்கு பிராப்தியாகமாட்டார்கள்.

140 ஜயாசா தயா சூகலே ப்ராப்த நாஹீ

G G DH DH

குணே கோவிலே ஜாஹலே துக்க தேஹீ

G G

குணேவேசளீ வ்ருத்தி தேஹி வளேஹ

ஜானே டேவணே மீபணே ஆகளேஹ.

